# காஞ்சி

ஆசிரியர்

அண்ணாதுரை

6-2-66





# உலக அரங்கில்

நியூயார்க்டைம்ஸ் இதழின் துணை ஆசிரியர்களுள் ஒருவரான ஜேம்ஸ் ரெஸ்டன் கடந்த சில வாரங்களுக்கு முன், கராச்சியிலிருந்து டோக்கியோவரை தான் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் விளைவாக ஆசிய அரசியலில், அமெரிக்க அரசின் முன்னர் மூன்றே மூன்று வழிவகைகள்தான் இருக்கின்றன என்றும், வாஷிங்டன் அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் விளக்கியிருந்தார். (1) வியட்நாம் விவகாரத்தை அப்படியே விட்டுவிட்டு அமெரிக்கா ஆசியாவினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும் (2) அல்லது முழுப்பலத்தையும் காட்டி வியட்நாமில் வெற்றி பெற முனைவதோடு ஆசியாவிலுள்ள அமெரிக்க சகாக்களான சியோல், கொரியா, செய்கோன் ஆகிய அரசுகளை வலிமைப்படுத்தவேண்டும் (3) இல்லையேல் இந்தியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், பார்மோசா, ஆஸ்திரேலியா ஆகிய கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளை ஒன்றுபடுத்தி ஆசியாவில் ஜனநாயக அரசுகள் பரவ முயல வேண்டும்.

இந்த மூன்று வழிகளில் எதனையும் தனியாகவோ அல்லதுமொத்தமாகவோ செயல்படுத்தும் நிலையில் இல்லை அமெரிக்க அரசு.

நியூயார்க்டைம்ஸ், வாஷிங்டன் போஸ்ட், நியூயார்க்ஹெரால்ட்டிரிபியூன், வாஷிங்டன் ஸ்டார் என்ற புகழும் பலமும் மிக்க நான்கு நாளிதழ்கள் அதிபர் ஜான்சனின் வியட்நாம் கொள்கையை எதிர்த்து ஒரு எழுத்துப் போரே துவங்கியுள்ளன. அண்மையில் ஒரு பத்திரிகையாளர் நடத்திய கருத்துப் பதிவுத் தேர்தலின் படி நான்கு சதவிகித அமெரிக்கர்களே இப்பிரச்சனையில் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனரெனினும் அதன் வன்மை அமெரிக்க அரசினரால் ஒதுக்கமுடியாத அளவுக்குக் காரண காரியங்களோடு அமைந்துள்ளது.

இதையெல்லாம் உணர்ந்த வகையில் அமெரிக்கா, இந்த ஆண்டு துவக்க முதலே வியட்நாம் பிரச்சனையில் மின்னல் வேக இயக்கத்தைமேற்கொண்டுள்ளது. ஜான்சனின் பிரத்தியேகத் தூதுவர் ஆரிமன் போலந்து, யுகோஸ்லேவியா, புதுடில்லி ஆகிய இடங்களுக்கு விரைவுப்பயணம் மேற்கொண்டு வியட்நாம்பற்றி பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அமெரிக்காவின் ஐ. நா. தூதுவர் பிரஞ்சு அதிபர் டிகாலேயும் போப் பால் அவர்களையும் சந்தித்துள்ளார். பிரதமர் சாஸ்திரியின் கிரியை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவந்த ஹம்ப்ரே, இரஷ்யப் பிரதமர் கோசிஜினுடன் இதுபற்றிக் கலந்துப் பேசியுள்ளார். இரஷ்யாவிலுள்ள அமெரிக்கத் தூதுவர் இரகசியமாக இரஷ்ய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துள்ளார். அதிபர் ஜான்சன் கனடா பிரதமர் பியர்சனுடன் 25-நிமிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார். துணைத் தலைவர் ஹம்ப்ரே, சியாங்கேஷேக்குடன் இதுபற்றி விவாதித்துள்ளார்.

இந்த பரபரப்பிற்குக் காரணமில்லாமலில்லை. உலகம் தெரிவிக்கும் கவலை உணர்வுகளுக்கும் மேலாக உள்நாட்டில் ஜான்சன் அரசு இப்பிரச்னை காரணமாக பல்வேறு சோதனைகளைப் பெற்று வருகிறது. இருமுறை தோல்வி கண்ட ரிபப்ளிக் வேட்பாளர் ரிச்சர்ட் நிக்சன் 'வியட்நாம்' அமெரிக்காவின் தேர்தல் பிரச்சனையாக்கப்படும் என்று பயமுறுத்துகிறார்.

வியட்நாமிய மண்ணில் போர்க் காரணங்களுக்காக டாலர்கள் தொடர்ந்து இரைக்கப்பட்டால் அது அமெரிக்காவின் நிதிநிலையைப் பாதிப்பதோடு கல்வி, முன்னேற்றம் ஆகிய இனங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவினங்களையே வெட்டவேண்டி நேரிடலாம் என்னும் அளவுக்கு இருக்கிறது. போர் தொடர்ந்து நடைபெற்றால் 1,75,000 எண்ணிக்கையில் உள்ள அமெரிக்க இராணுவம் 6,00,000 அளவுக்கு அதிகரிக்கப்படவேண்டும் என இராணுவம் கணக்குத் தருகிறது. எனவே ஜான்சன் "துப்பாக்கியா அல்லது ரொட்டியா?" என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியவராயிருக்கிறார். இந்நெருக்கடி காரணமாகவே வியட்நாம் பிரச்னையைத் தீவிரமாக்கி இருக்கிறார் ஜான்சன்.

செஞ்சீனா தெரிவித்துள்ள எதிர்ப்பு, வெறுப்பு, பகைமை அனைத்தையும் மீறி சோவியத் யூனியன நேர்முகமாகவே இப்பிரச்சனைக்கு ஒரு தீர்வு காணும் பணியில் இறங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். கட்சித் தலைவர் ஷெல்பின் வடக்கு வியட்நாம் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ள இருக்கிறார். அமெரிக்காவுடன் கொள்கையளவில் ஒத்திருக்கவில்லையெனினும் வியட்நாமிய போருக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்பதில் ரஷ்யா அக்கறை காட்டுவதை யாரும் மறுக்க முடியாது. இதனால் அது சம்பாதிக்க நேரிடும் சீனப் பகைமையையும் யாரும் இல்லை என்று கூறிட இயலாது.

இந்த ஒரு நிலையை அமெரிக்கா முழு அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது. தெரிந்தோ தெரியாமலோ அமெரிக்க அரசு ஆசிய அரசியலில் தொடர்பு கொண்டுள்ள நாள் முதல் "எங்கும் எதற்கும் எப்போதும் கம்யூனிச எதிர்ப்பு" என்ற ஒரே போக்கில்தான் செல்கிறது. இதுகாறும் இத்தகைய போக்கு ஆசியா கண்டத்தில் ஒரு அமைதியற்ற தன்மையையும் சர்வதேச அரசியலில் அவ்வப்போது கொந்தளிப்புகளையும் மட்டும்தான் உருவாக்கி வந்தது; இப்போது அது அமெரிக்காவின் உள்நாட்டு அரசியலையே பாதித்துள்ளது. வியட்நாமில் அமெரிக்கா இழந்துள்ள உயிர், பொருள் சேதங்கள் ஆசிய அரசியலுக்கே ஒரு விடிவுகாலமாக அமையவேண்டும். இதையேதான் சூசகமாகவும், சற்று ராஜதந்திரத்துடனும் அமெரிக்க அரசுக்கு அறிவுறுத்துகிறது நியூயார்க் டைம்ஸ் இதழின் தலையங்கம் ஒன்று. 'சீன, இரஷ்யப் பகைமையை உபயோகப்படுத்தி வியட்நாம் பிரச்சனைக்குத் தீர்வுகண்டு விடுங்கள்' என்று!

ஆனால், வியட்நாம் விவகாரத்தில் 'அமைதியும் தீர்வும்' காணுவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்படி யோசனை கூறுபவர்களை, அமெரிக்க வெளிவிவகார இலாகா காரியதரிசி டீன்ரஸ்க் கண்டிக்கத் தொடங்கி இருக்கிறார். ஹனாய் ஆட்சிக்கும், வியட்காங்குக்கும் இப்படி யாரும் யோசனைகள் சொல்வதில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்கிறார்.

எது எப்படியானாலும், தென் வியட்நாம் விவகாரத்தில் துரிதமாக ஒரு தீர்வு கண்டாலன்றி; அமெரிக்காவிலோ, ஆசியாவிலோ அமைதிக்கு வழியில்லை என்பதை அகிலம் உணரத் தலைப்பட்டு விட்டது!

—அரசியல் மாணவன்

காஞ்சி

மலர் 2 6—2—66 இதழ் 26, 27, 28

# இயம்பிடுவீர்! செயலாலே!!

இருள் சூழ்ந்தது, இதயம் துடித்தது, லால்பகதூர் மறைவால்.

ஒளி பிறந்தது. நம்பிக்கை மலர்ந்தது, இந்திரா காந்தி அவர்கள் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தால், என்று அறிவிக்கப்பட்டது.

ராஜதந்திரம் வென்றது, மொரார்ஜி வீழ்த்தப்பட் டார்; காமராஜரின் நிலை, மலை உயரமாயிற்று என்று அர்ச்சிக்கிறார்கள், 'பிரசாதம்' பெறுவோர்.

ஆனால் நாட்டு மக்களை வாட்டி வதைத்திடும் பிரச் சினைகள் தீர்க்கப்படுவதற்கான வழியில் சிந்தனையைச் செலவிட ஆளவந்தார்கள் துணிவுகொள்ள மறுத்தபடி உள்ளனர்.

வேதனை கப்பிக்கொள்ளும் நிகழ்ச்சிகள் நேரிட்டு விடும்போது, இந்தச் 'சோகச் சூழ்நிலையில், அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும், குறைகூறித் திரிந்திட லாகாது' என்று உபதேசம்—அழுதகண்ணினர் வாதி டும் நிலையினில் இருந்திடமுடியாது என்ற துணிவுடன்.

மகிழ்ச்சி மலர்ந்திடும் நிகழ்ச்சி தோன்றிடும்போது இந்த மகிழ்ச்சிகரமான வேளையில் மனதைக் குழப்பும் பிரச்சினைகளைக் கிளப்பாமல், எல்லோரும் நல்லது நடந்தே தீரும் என்ற நம்பிக்கையுடன் இருந்து வர வேண்டும் என்ற அன்புரை! விழாக் கோலத்தில் உள் ளவர்கள், தட்டிக் கொடுத்திடுவதையும் தடவிக் கொடுத்திடுவதையும் விரும்பி ஏற்பர் என்ற எண் ணத்தில்.

நிலைமை எது எனினும், மாறுதல், திடுக்கிடத் தக்கதெனினும் தித்திப்பு தூரத்தக்கதாயினும், ஒரே திருப்பல்லாண்டு, நல்லது நடக்கும் நம்புங்கள்; பொறுத் திடுங்கள், பொங்கிடும் இன்பப் புதுவாழ்வு என்பதாக.

நாட்டின் நிலையோ, அவ்விதம்உற்சாகமும் நம்பிக் கையும் கொள்ளச் செய்வதாக இல்லை.

பாகிஸ்தான் தளபதி மூசாவும் இந்தியத் தளபதி சவுத்ரியும் கைகுலுக்கிக் கொண்டாகிவிட்டது, கனி மொழி பேசியாகிவிட்டது. படைகள் திரும்பப் பெறப் படுகின்றன; கட்டிய அரண்கள் இடித்துத் தள்ளப்படு கின்றன; வெட்டிய குழிகளை மூடுகிறார்கள் மண்ணை அள்ளிப் போட்டு; வெண்புறு பறக்கிறது! ஆனால் இந்த நிலையிலும் 'சட்டமற்ற சட்டம்' என்று சட்ட நிபுணர்களால் கண்டிக்கப்பட்டு வரும் பாதுகாப்புச் சட்டம் நீக்கப்படவில்லை. எந்த நேரத்திலும் எவர்மீதும் பாயலாம்; அகன்ற வாயும், நச்சுப் பற்களும் கொண்ட காட்டு விலங்கினைக் கூட்டினிலிடாமல் கூடத்தில் உல விடச் செய்துவிட்டு, அது உன்னைக் கடித்திடாது —காரணமற்று—உன் வேலைகளை ஒழுங்காகக் கவ னித்து நட—என்று கூறுவதுபோன்ற கொடுமை இது.

உணவுப் பிரச்சினை மக்களின் உள்ளத்தை எரி மலையாக்கி விடுகிறது. கேரளம் கொதித்தெழுந்து நிற்கிறது; துடிக்கிறது.

ஆர்ப்பாட்டம் செய்வீரேல், அடக்கிடும் வலிவு உண்டு! வெடித்திடும் குண்டுகள், வீழ்வீர் பிணமாக! எச்சரிக்கை! எச்சரிக்கை! என்று இடியோசை கிளப்பு கிறது ஆட்சிப் பீடம்.

வாழ்வு கேட்கிறார்கள் மக்கள்—முழு வாழ்வு—புது வாழ்வு!

'வணக்கம்' சொன்னார் கேட்டீர்களா! வண்ண வண்ண ஆடை உடுத்தி, ஆடிப்பாடி மகிழ்ந்தார், கண் டீர்களா! புதுப் புது மந்திரிகள் வந்துள்ளார், தெரிந்து கொண்டீர்களா!—என்று விழாச் செய்திகளைக் கூறி, வாழ இது போதாதா என்கின்றனர், இச்சகம் பேசிடுவோர்.

எட்டுத் திக்கும் அவர் புகழ்! எங்கெங்கும் அவர் செல்வாக்கு! எந்தெந்த நாட்டுத் தலைவரும் பாராட்டு கின்றனர்! கேளீரோ! கேளீரோ! என்று சிந்து பாடு வோரும், கும்மி கொட்டுவோரும், சாமான்யர்கள் என்ற நிலையிலே அல்ல, 'கனம்'கள் என்ற நிலையினில் உள்ளார்.

நேருவுக்கு அடுத்தபடி அவர்! அறிந்திடுக! அடங் கிடுக!! என்று கூறுகின்றனர், நேருவையே தேவைப் பட்டபோது எதிர்த்து நின்ற உள்ள உரம் படைத்தோர் களைப் பார்த்து.

மாணவர்களை, மணிகளே! என்று அழைத்திடு கிறார் ஓர் சமயம், உண்டி நிரம்பப் பணம் தந்திடும் போது. உயிரினும் இனிய எமது தாய்மொழியின் நிலை யாது? ஏன் எமக்கு இந்தி எனும் ஆட்சி மொழி என்று அம்மாணவர் கேட்டிடும் காலையோ, உருட்டி விழி காட்டி, உண்மையை உணராதோரே! எவரெவரோ ஆட்டிவைக்கும் விதமெல்லாம் ஆடிடுவோரே! படியுங் கள், படிக்கச் சொல்வதை! ஆட்சி மொழி இந்தியே, அதனை ஆயிரத்தெட்டு முறை கூறியுமா அறிந்திட வில்லை!! என்று அதட்டுகின்றார், ஆட்சிப் பீடத்தில் அமர்ந்துவிட்டதால் ஆற்றல் பெற்றுள்ளோர்.

நேற்றுதானே இம்மாணவர்கள், "நாடு காத்திடும் நற்றலைவரே வருக! வாழ்க! பாதுகாவலரே, படை திரண்டு நிற்கின்றோம், பயன்படுத்திக் கொள்க!" என் றெல்லாம் 'பஜித்து'க் கிடந்தனர்; இன்றென்ன வந்தது இவர்கட்கு; இந்தியாம் ஆதிக்கமாம், எதிர்ப்பாம்; நாணம்! சேச்சே! ஏன் இப்படிக் கெட்டுப் போயினர்!! —என்று கேட்கின்றனர் 'கனம்' ஆனோர்.

கேட்டதிலையோ கதை ஒன்று; சீறும் சிறுத்தைக் குட்டியொன்று, வீடு புகுந்தது. வாரீர் என்று அழைத் திடும் குரல் கேட்டு, ஓடிவந்தனர் ஒரு பதின்மர். கோலோடு அரிவாள் தூக்கிக்கொண்டு, கொன்று போட்டனர் கொடிய மிருகத்தினை; கூப்பிட்ட குரலுக் குப் பதின்மர் ஓடோடி வந்தது எதன் பொருட்டு என்ப தனை உணராதான் 'நம் குரலின் வலிவு அஃது; நம்மி டம் அவர் கொண்ட பரிவு' அவ்வளவு என்று தவறாக எண்ணிக்கொண்டு, கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வரு

பவரே! ஓ! எந்தன் நண்பர்காள்! வருவீர் இப்போது! என் தோட்டம் காய்ந்திடுது! எருக்கு நிரம்பிய எழிலான தோட்டமிது! இழுத்து இறைத்திடுவீர் தோட்டம் வளமாக கிணற்றின் நீரை! என் கிணறு மிகப் பெரிது! வந்திடுக!! என்றழைக்க, 'ஏனய்யா பெரியவரே! ஏமாளி என்றே எமை எண்ணிக் கொண்டீரோ! உன் வீடு புகுந்துவிட்ட சிறுத்தைக் குட்டியது ஊரழிக்கும், ஆபத்து, அதனாலே ஓடோடி வந்து அதை அடித்துக் கொன்று போட்டோம்; கேடுசூழ் பொட்டலிலே கிணற்று நீர் இழுத்து இறைக்க அழைத்திடுகின்றீரே! எதற்கு வருவது, எதற்கு வாராதிருப்பது என்பதுவும் அறியோமா! உமது குரல் கேட்டு, சொக்கிவந்தோமென எண்ணிக் கொண்டீரோ! போமய்யா போம்! என்று கூறினராம் அப்பதின்மர் கெக்கலி செய்து.

அந்தக் கதைபோல, விந்தை அமைச்சரவர், நாடு காத்திடுதற்குத் திரண்டுவந்த மறவர்களை, இந்திக்கு அடி பணிய அழைத்திடுதல் காண்கின்றோம். வருவாரோ!!

அன்பர் லால்பகதூர் மறைந்தார், அழுகின்றோம்.

அம்மை இந்திராவும் அரியாசனம் பெற்றார், மகிழ்கின்றோம்.

புகழாரம் சூட்டுகிறார் காமராஜப் பெரியார்க்கு; பூரிப்பு அடைகின்றோம்.

ஆயினுமென்! பசி போக்க உணவு கொடு! பாழும் வறுமையினை ஓட்டிட வழி காட்டு! மொழி ஆதிக்கந்தன்னை முயன்று முறியடித்து, தமிழ் வாழ வழி கண்டிடுவாய் என்று கூறுவதை மறப்பாரோ? இதயமென்ன, கல்லோ! உணர்வு மடிந்திடுமோ, உரிமை உணர்ச்சிதானும் மங்கிப் போய்விடுமோ! வீண் கனவு! வெற்றுரை!

ஆளவந்தார்க்கு நாடு கூறுவது இஃதே; நீண்ட காலம் நீவிர் ஆண்டு வருகின்றீர்! வாழ்த்தி வரவேற்றோம், சிரம் தாழ்த்தி வணங்கி நின்றோம்; பெற்றதோ, பீடை, பெரும் இழப்பு, பஞ்சம், பசி எனும் பாதங்கள். இனியும் உமைக் கொண்டு இதம் தேடிப் பெற்றிடுதல் முயற்கொம்பு எனக் கண்டுகொண்டோம்! ஆகவே ஐயன்மீர்! புது அமைப்பு நாடுகின்றோம்; புதுமுறை தேடுகின்றோம், பொதுத் தேர்தல் நாளதனை எதிர் நோக்கி நிற்கின்றோம்; பொறுப்புணர்ந்து கொண்டுவிட்டோம்; பொல்லாங்குதனை வீழ்த்த வழி புரிந்து கண்டோம், காண்! என்பதுவேயாகும்.

மக்கள் கொண்டுள்ள இந்த மன உறுதியினைக் கண்டு கணக்கெடுத்து, நாட்டினரின் துணையினையே நம்பிப் பணிபுரிய, நல்ல முறை பலவும் வகுத்திடவே கூடிற்று, கழகப் பொதுக் குழுவும். உழைத்துக் கழகமது உயர்ந்த நிலைபெறச் செய்த ஆற்றல் மறவரவர் கூடிக் கருத்தளித்தார்; நாடி வருகின்றார் நாட்டினரின் துணை தேடி! மக்களாட்சியது மாண்பு பெற்றிடவும், இன்னல் பல ஒழிந்து இன்பம் மலர்ந்திடவும், கன்னல் மொழியாம் தமிழ் காத்திடவும் அரியணை ஏற்றிடவும், காட்டிடுவீர் கனிவு நிறை ஆதரவை; காலம் அழைக்கிறது; கடமை அழைக்கிறது; நல்ல சமயமிது, நழுவ விடாதீர்கள்!! என்றுரைக்கிறது எளியோரின் கழகமது. என்ன விடை அளிக்கின்றீர்? என்ன உமது பங்கு? இயம்பிடுவீர், செயலாலே!!

## இந்த வாரம், இந்த நாட்டில்

திருவனந்தபுரம், பிப். 1—உணவுப் பற்றாக் குறையை எதிர்த்து இங்கு மீண்டும் நடத்தப்பட்ட போராட்டத்தில், தடியடியும், கண்ணீர்ப்புகை வீச்சும் நடத்தப்பட்டது; பல இடங்களில் தீ வைப்புகள் நடந்துள்ளன. பஸ்கள் கொளுத்தப் பட்டன.

சென்னை, பிப் 1—தி. மு. க. பொதுக்குழு கூடி பல தீர்மானங்களை நிறைவேற்றியது மீண்டும் பொதுச்செயலாளராக அண்ணா அவர்களே இருக்கவேண்டுமென குழு கேட்டுக்கொண்டது.

எர்ணாகுளம், பிப். 1 — கேரளாவில் நடந்த துப்பாக்கிச் சூடு, கண்ணீர்ப் புகைவீச்சு குறித்து விசாரணை கிடையாதென கவர்னர் ஜெயின் கூறினார். ஜெயின் ராஜினாமா ஏற்கப்பட்டு புதிய கவர்னராக திரு. பகவான்சகாய் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதுடில்லி, பிப். 2—இந்திய ராணுவத்தின் தளபதியாக பி.பி. குமாரமங்கலம் நியமிக்கப்பட்டார் பாக். யுத்தத்தின்போது தளபதியாக இருந்த சௌத்ரி பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

சென்னை, பிப். 2 — உலகத் தமிழ் மாநாடு அடுத்த ஆண்டு தமிழ் நாட்டில் நடைபெறுமென்றும், இவ்வாண்டு கோலாலம்பூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதிகள் அனுப்பப்படுவார்கள் என்றும் முதலமைச்சர் பக்தவத்சலம் சட்டமன்றத்தில் கூறினார்.

சென்னை, பிப். 2—தமிழ் ஆட்சிமொழி என்று சொல்லப்படுவது உண்மையானால், 'கல்லூரிகளில், தமிழையே ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று சட்டமன்றத்தில் மதியழகன் கொண்டுவந்த திருத்தத் தீர்மானம் ஒன்று காங்கிரஸ் பெரும்பான்மையால் வெற்றிபெறவில்லை.

நாகர்கோயில், பிப். 2 — கேரளாவில் நடந்து வரும் உணவுப் போராட்டம் அடங்கி, அமைதி ஏற்படும் வரையில் தமிழ் நாட்டிலிருந்து கேரளாவுக்குச் செல்லும் அரசாங்கப் பஸ் போக்குவரத்து தற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



உறுதிக்கும்
உழைப்பிற்கும்
உத்திரவாதமான
புதிய
தகட்டில்
தயாரிக்கும்
இரும்புப்
பெட்டிகள்
கிடைக்கும்.

தயாரிப்பாளர்: P. V. அழகர்சாமி,
இரும்புப் பெட்டி தொழிற்சாலை,
ரயில்வேரோடு, நாகல் நகர், திண்டுக்கல்-3.

தம்பி

# வெள்ளை மாளிகையில்! (1)

வெள்ளை மாளிகை சென்றிடலாம் வருகின்றாயா? ஆமாம்! அமெரிக்க அரசு அதிபர்
கொலுவிருக்கும் அழகு மணிமாடம்தான், அங்கா? நாமா? என்று மலைக்காதே! நாம் யார்?
மனிதரில்லையா!! மனிதருக்காக அமைவதுதானே மாடம் கூடம் மணிமண்டபம் மாளிகை என்
பவை யாவும்; மாளிகையின் நிறமும் பெயரும் எதுவாக இருந்தால் என்ன—வெள்ளை—சிகப்பு
—பச்சை—நீலம்—இவை பல்வேறு வகையான வண்ணங்கள், வேறென்ன? அமெரிக்க அதிபர்
வீற்றிருக்கும் மாளிகைக்கு வெள்ளை மாளிகை என்று பெயர் இருப்பதாலேயே, மாநிறக்காரர்
நுழையக்கூடாதா என்ன!

மேலும் நான் வெள்ளை மாளிகைக்கு வரச்சொல்லுவது, அதனை மனக்கண்ணால் காண்
பதற்காகததான். நாம் மாநிறம்! ஆனால் நான் உன்னைக் காண அழைக்கும் வெள்ளை மாளிகை
யில் ஒரு கருப்பு மனிதர் அரசோச்சுகிறார். எனக்குள்ள ஆசை அந்த வெள்ளை மாளிகையைக்
காண்பதிலேகூட அவ்வளவு இல்லை; அங்கு ஒரு கருப்பு மனிதர் ஆட்சி செய்வதைக் காண்
பதிலேதான்.


வெள்ளை மாளிகையில் ஓர் கருப்பு மனிதர்!—என்று நான் கூறுகிறேன், ஆனால் தம்பி!
அந்த ஏட்டுக்கு உள்ள தலைப்பு அது அல்ல; மனிதன் என்பதே தலைப்பு.

நிறம், வடிவம், நாடு, மதம், மொழி, நிலை, எப்படி எப்படி இருந்திடினும், மனிதன் மனி
தன்தானே! அந்த உயர்ந்த பண்பினை உணர்த்தவேண்டும் என்பதற்காகவே நூலாசிரியர்
தமது ஏட்டுக்கு மனிதன் என்ற தலைப்பிட்டுள்ளார். அந்த 'மனிதனை'க் காண்பதற்காகவே,
உன்னை வெள்ளை மாளிகைக்கு அழைக்கிறேன்; அங்கு யாராரோ இருந்தனர்; ஆனால் மனிதன்
கொலுவிருக்கும் மாளிகையாக இருந்திடும் நிலையை இந்த 'ஏடு' மூலமே காணமுடியும். கண்
டேன, களிப்புற்றேன்; எண்ண எண்ண இனித்திடும் கருத்துண்டேன், அந்தச் சுவையை
நான் தம்பி! உன்னுடனன்றி வேறு எவருடன் கலந்துண்பதிலே மகிழ்ச்சி பெற்றிடுவேன்.
அதனால் உன்னிடம கூறுகிறேன்; மேலும் உன்னிடம் கூறுவதென்பது உயர் கருத்துகளின்
பெட்டகம் போன்ற மனம்படைத்த இலட்சியவாதியிடம் கூறுவதென்றல்லவா பொருள் படு
கிறது; அதனால் கூறுகிறேன்.

இப்போது அந்த வெள்ளை மாளிகையில் அமர்ந்து அரசோச்சுபவர் லிண்டன் ஜான்சன்;
அறிவாய. அவர் சென்ற திங்கள் பெருமிதத்துடன் பேருரையாற்றி இருக்கிறார், உலகிலேயே
நமது நாடுதான் செல்வம் மிகுதியாக உள்ள நாடு என்று; பழக்கப்படட 'பாஷை' விரும்பு
வோருக்காகச் சொல்லுகிறேன், 'குபேரபுரி'.

அந்தக் 'குபேரபுரி'யின் அதிபராகக் கொலுவிருக்கும் ஜான்சன், இப்போது உள்ளது
போன்ற வளம் — செல்வப் பெருக்கம் — இதற்கு முன்பு எப்போதும் இருந்ததில்லை — அந்தச்
செல்வம் மேலும் மேலும் வளருகிறது, நமது நாட்டு மக்களின் வாழ்க்கையைப் பூந்தோட்ட
மாக்கிடத்தக்க அளவு மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே மணம் வீசும் வாழ்வு மலரச் செய்
திடத்தக்க அளவுககு" என்று பூரிப்புடன் பேசியிருக்கிறார்.

இப்போதே தம்பி! அந்த அமெரிக்கப் பணம் நடமாடாத நாடு இல்லை என்று கூறலாம்;
அந்த நாட்டை நாடாத தலைவர்கள் இல்லை என்று சொல்லலாம். யாரோ ஒரு கணக்குச்



சொன்னார்கள் இந்தியாவிலே மக்கள் சாப்பிடும் உணவில் எட்டு கவளத்தில் ஒன்று அமெரிக்கா கொடுப்பது என்று. எனவே ஜான்சன், அமெரிக்காவின் அளவு கடந்த செல்வம் இந்த அவனி முழுவதும் ஆனந்த வாழ்வு மலரச் செய்ய உதவிடும் என்று கூறிக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறார். அமெரிக்காவை எதிர்பார்த்துத்தானா நம் வாழ்க்கை அமையவேண்டும் என்று எண்ணிப் பார்க்கவேண்டிய கடமை, கைஏந்துபவர்களுக்கு இருக்கிறது. அது ஒரு தனிப்பிரச்சினை. இப்போது ஜான்சன் கூறியிருப்பதிலே நாம் கவனித்துப் பார்க்கவேண்டிய பகுதி அமெரிக்காவில் இன்றுள்ள செல்வ மிகுதி. அது மறுக்கமுடியாத உண்மை. பணத்திலே புரளுகிறார்கள் என்று கதைகளிலே எழுதுகிறார்களே அது மெய்யான நிலைமையாக இருக்கிறது அமெரிக்காவில்.

ஒரு கணக்கு காட்டுகிறேன், பார்த்துத் தெரிந்து கொள்ளேன், நிலைமையை.

இன்று அமெரிக்காவில் உள்ள மோடார் கார்களின் எண்ணிக்கை 690 இலட்சம்! டெலிபோன்கள் 890 இலட்சம்! டெலிவிஷன் செட்டுகள் 600 இலட்சம்! உல்லாசப் படகுகள் 70 இலட்சம்!

அமெரிக்க மக்கள் ஆண்டொன்றுக்கு இப்போது செலவிடும் பணம் இருக்கிறதே, வாழ்க்கை நடத்த, உல்லாசம் பெற. எவ்வளவு தொகை தெரியுமா, தம்பி! எச்சரிக்கையாக இரு, மயக்கம் வந்துவிடப்போகிறது, அவர்கள் செலவிடும பணம் **198,550 கோடி** ரூபாய்!! **1985500000000!** இவ்வளவு ரூபாய்கள் செலவிடுகிறார்கள் ஒரே வருடத்தில். பணத்திலே புரள்கிறார்கள் என்று ஏன் சொல்லக்கூடாது!!

தம்பி! ஓய்வு நாட்கள் உள்ளனவே, இயற்கை அழகு காண, செயற்கைச் சேட்டைகளைச் சுவைக்க, மலையுச்சி ஏற, கடலிலே குடைந்தாட, இவ்விதமான இன்பப் பொழுதுபோக்கு, இதற்கு மட்டும் இந்த ஆண்டு அமெரிக்க மக்கள் செலவிடும் தொகை 14,250 கோடி ரூபாயாம்! கேட்டனையா!! செயற்கை நீச்சல் குளங்கள் மட்டும் சென்ற ஆண்டு புதிதாக 50,000 அமைத்திருக்கிறார்களாமே!

பணம் இந்த அளவு புரளும்போது, என்னென்ன சாமான்கள்தான் அவர்கள் வாங்கமாட்டார்கள்! இங்கு நமக்கிருக்கிற தரித்திர நிலை, மகன் சட்டை தைத்தால் தகப்பன் மேல் வேட்டியை ஒட்டுப் போட்டு போட்டுக்கொள்ளும் நிலையையும், மகளுக்குச் சேலை வாங்கினால் தாய் சாயம் போனதைத் துவைத்துக் கட்டிக்கொள்ளவேண்டிய நிலையையும் மூட்டிவிடுகிறது. அங்கே பணம் படுத்துகிறபாடு, என்னவாங்கலாம், எவ்வளவு வாங்கலாம் என்ற மன அரிப்பைத் தருகிறது. பண்டங்களை விற்பனை செய்பவர்கள், தத்தமது சரக்குகளை வாங்கும்படி மக்களைத் தூண்டிட விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரச் செலவுக்காக மட்டும் வணிகர்கள் செலவிடும் தொகை, ஒரு ஆண்டுக்கு, 6650 கோடி ரூபாயாம்.

இதைப்போல முன்பு ஒருமுறை பணம் புரண்டது, உச்சிக்குச் சென்று உருண்டு கீழே விழுவதுபோல, அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஒரு பெரிய சரிவு ஏற்பட்டது; அது 1929ல் என்று எச்சரிக்கை தந்துள்ளனர் சிலர். ஆனால் பல பொருளாதார நிபுணர்கள் அவ்விதமான பயத்துக்குத் துளியும் ஆதாரம் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இதுபற்றி கருத்து வேற்றுமை இருப்பினும், இன்றைய செல்வப் பெருக்கம் பற்றி மட்டும் யாரும் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

அத்தகைய அமெரிக்க நாட்டின் ஆட்சிபீடம் அமைந்துள்ள இடம் வெள்ளை மாளிகை!

ஆட்சிப் பீடம் உள்ள இடத்துக்குத்தான் வெள்ளை மாளிகை என்று பெயர் இருக்கிறது. ஆனால் அந்த ஆட்சியிலே உள்ளவர்கள் அனைவரின் நிறமும் வெள்ளையல்ல; கருநிறம் கொண்டவர்கள் இருக்கிறார்கள்; நீக்ரோ மக்கள்.

நிறம் கருப்பு, இனம் நீக்ரோ, பூர்வீகம் ஆப்பிரிக்கா கண்டம்; ஆனால் அவர்கள் அமெரிக்கர்கள்; சட்டம் சொல்லுகிறது; ஆபிரகாம் லின்கன் அவர்களும் அமெரிக்கர்களே என்று வார்த்தைகளை வீசி மட்டுமல்ல ஒரு பெரிய பயங்கரமான உள்நாட்டுப் போர் நடாத்தியே கூறிடவேண்டி நேரிட்டது. "சரி" என்றனர்; உதடு அசைந்தது தம்பி! உதடு! உள்ளம்இருக்கிறதே அதிலே புற்றரவு புகுந்துகொண்டுதான் இருக்கிறது, சாகவில்லை; சாகடிக்கவும் முடியவில்லை; அதனைச் சாகடிக்கத் துணிந்து கிளம்பிய கென்னடியைக் கொடியோர் கொன்றுவிட்டனர், பதறப் பதற; பக்கம் இருந்த அவர் துணைவியார் ஜாக்குலீன் துடிக்கத் துடிக்க.

இறவாப் புகழ் பெற்றுவிட்ட கென்னடி இதே வெள்ளை மாளிகையிலேதான் தங்கி ஆட்சி நடாத்தி வந்தார். அந்த வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பு மனிதரை—நீக்ரோவை — அதிபராக அமரச் செய்து பார்க்கிறார், 'மனிதன்' எனும் ஏடு எழுதியுள்ள இர்விங் வாலாஸ் என்பவர். அந்தப் புத்தகத்தைப் படித்ததிலிருந்து எனக்கு ஒரே ஆவல், உன்னிடம் கூறவேண்டும் என்று. ஆனால், அந்த ஏட்டிலே கூறப்பட்டுள்ள கருத்தின் முழுப் பொருளைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால், உட்பொருளை உணரவேண்டுமானால், 'கருப்பு மனிதர்கள்', வெள்ளை மாளிகை உள்ள நாட்டில், எப்படி நடத்தப்பட்டு வந்தார்கள், எப்படி நடத்தப்பட்டு வருகிறார்கள் என்பது பற்றித் தெரிந்து கொண்டாக வேண்டும். 'நீக்ரோ'க்களின் பிரச்சினையின் வேதனை நிரம்பிய உண்மைகளை உணர்ந்தால் மட்டுமே, இர்விங் வாலாஸ் தீட்டியுள்ள காவியம்போன்ற ஏட்டின் கருத்து பயனளிக்கும், பொருள் விளங்கும். வெள்ளைப் புலி என்பது விளங்க வேண்டுமானால், புலியைப் பற்றியும் வெள்ளை நிறம் பற்றியும் புரிந்திருக்க வேண்டுமல்லவா. தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமை வகிக்கிறார் என்று பிரான்சு நாட்டிலே உள்ளவரிடம் சொன்னால், முழுப்பொருள் விளங்குமா? தீண்டாமைக் கொடுமையின் கேடுகளையும், தில்லை தீட்சிதர் என்ற முறையின் தன்மையையும், காலவேகம் இந்த இரண்டு நிலைமைகளையும் மாற்றிவிட்டிருப்பதனையும் அறிந்தவர்கள் மட்டுமே தில்லைத் தீட்சிதர் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டுக்குத் தலைமைவகித்தார் என்ற வாசகத்தின் முழுப் பொருளையும் உணரமுடியும். அதுபோலத்தான் 'மனிதன்' எனும் அந்த ஏட்டிலே உள்ளவற்றினை முழு அளவில் உணரவேண்டுமானால், அந்த ஏட்டிலே இல்லாத, வேறு பல ஏடுகளிலே உள்ள பல உண்மைகளையும் நிலைமைகளையும் கூறியாக வேண்டும். ஆகவே தம்பி! இந்த ஏடு என்னை உன்னிடம் வேறு பல ஏடுகளைப் பற்றிய நினைவுகளையும் கூறிடச் செய்கிறது. ஒரு நல்ல, உயிருள்ள ஏட்டுக்கு இதுவே சிறந்த இலக்கணம் என்று கூடக் கூறலாம்.

'டாம் மாமாவின் வீடு' என்ற ஒரு ஏடு, நீக்ரோ பிரச்சினையை உருக்கத்துடன் எடுத்துக் கூறுவது. அது 'அந்த நாட்களில்' புரட்சி ஏடு! இன்றுள்ள அமெரிக்க நீக்ரோக்கள், 'டாம் மாமா' என்றால் சண்டைக்கு வருவார்கள்! அந்த ஏட்டின் கருத்து நீக்ரோக்களுக்கு விடுதலை வாங்கித் தாராது; அது அடிமை வாழ்க்கைக்கு ஒரு அலங்கார மெருகேற்றும் தந்திரத் திட்டம் என்று கூறுகிறார்கள்.

எந்த அளவுக்கு மனம் வெதும்பிக் கிடக்கிறது, ஆத்திரம் பீறிட்டுக் கிளம்பிவிட்டிருக்கிறது என்றால், வெள்ளையர் எங்களைச் சமஉரிமையுடன் நடத்தவே மாட்டார்கள்; எனவே எமக்கென்று அமெரிக்காவில் ஒரு தனி நாடு அமைத்துக் கொடுத்திடுக! என்று கேட்கின்ற அளவுக்குச் சென்றிருக்கிறது. இன்னும் சிலர், நாங்கள் அமெரிக்காவில் இருக்கிறோம், ஆனால் அமெரிக்கர் அல்ல; அமெரிக்கர் ஆகவும் முடியாது; தேவையுமில்லை; நாங்கள் நீக்ரோக்கள், எங்கள் தாயகம் ஆப்பிரிக்கா; நாங்கள் அங்கு சென்று; 'எங்கள் இரத்தத்தின் இரத்தமாக உள்ள நீக்ரோ இனத்தாருடன் சேர்ந்து வாழ்ந்து கொள்கிறோம், இதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால் போதும் என்று கேட்கத் தலைப்பட்டு விட்டனர்.

இத்தகைய நிலைமை இருந்திடுவது உணரப்பட்டால்தான், வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதர் என்பதன் பொருள் விளங்கும்.

அமெரிக்க அரசு, நீக்ரோக்களில் தகுதி மிகுந்த சிலருக்கு உயர் பதவி கொடுத்திருக்கிறது. கீர்த்தி மிக்க வழக்கறிஞர்கள்; கைதேர்ந்த மருத்துவர்கள், வளமான வாழ்க்கை நடாத்தும் வணிகர்கள் நீக்ரோக்களில் இருக்கிறார்கள். அதுபோலவே அரசாங்க அலுவலிலும் திறமை மிக்க அதிகாரிகளாகச் சில நீக்ரோக்கள் இருக்கிறார்கள்.

சென்ற திங்கள் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் ஜான்சன், அமைச்சரவையிலேயே ஒரு நீக்ரோவுக்கு இடம் கொடுத்திருக்கிறார்.

இந்தச் சம்பவங்கள் உலகத்தாருக்கு, பாராட்டுதலுக் குரியதாக, வாழ்த்தி வரவேற்கத் தக்கதாகத் தென்படுவதற்குக் காரணம், இவை கோபுரக் கலசங்கள் போலப் பளபளப்பாகத் தெரிபவை; உலகின் கண்களுக்குச் சரியான அளவிலே தெரியாமல் உள்ள, அமெரிக்கக் கருப்பர்களின் பொதுவான வாழ்க்கையிலே ஏற்றப்பட்டிருக்கும் இழிவுகள், சிறுமைகள், கொடுமைகள், இன்னல்கள் மலைபோல உள்ளன.

இத்தகைய நிலையிலே உள்ள கருப்பர்களிலே சிலர், டாக்டர்களாவதும், வழக்கறிஞராவதும், அரசாங்க அதிகாரிகளாவதும், அமைச்சர் அவையிலே இடம் பெறுவதும், நடைபெறக் கூடாதன நடந்துவிட்டன என்ற பட்டியலைச் சேர்ந்தவை; மலடி வயிற்று மகன்! புதையல் எடுத்த தனம்!

அமைச்சர் அவையிலே இடம் பெற்றுவிடுவதே 'அதிசயம்' 'அதிர்ச்சி தரத்தக்க மாறுதல்' என்று கருதப்படுகிறது என்றால், ஒரு 'கருப்பு மனிதர்' வெள்ளை மாளிகையில், ஆட்சித் தலைவராகவே அமருவது என்றால், வெள்ளை வெறியர்களின் மனம் எரிமலையாகி வெடித்து ஆத்திரக் குழம்பினை அல்லவா கக்கிடச் செய்திடும்.

துணிந்து, ஆனால் தூயநோக்கத்தோடு, நூலாசிரியர் கருப்பு மனிதரை வெள்ளை மாளிகையில் அதிபராக

> ## "காஞ்சி"
>
> ஜனவரி 2-ம் தேதிய இதழுக்குப் பின், பொங்கல் மலர் வெளிவந்துள்ளது. அடுத்து அலுவலகத்திற்கு விடுமுறையாதலால், 23, 30-ம் தேதிய இதழ்கள் வெளிவரவில்லை என்பதை எல்லா விற்பனையாளர்களுக்கும், சந்தாதாரர்களுக்கும், எல்லா நூலகத்தினருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.
>
> உரிமையாளர்.

அமரும்படித் தம் கற்பனைக்குக் கட்டளையிட்டாரே தவிர, அவருக்கேகூட, அதிகதூரம் கற்பனையை ஓட விடக்கூடாது, நம்பவே முடியாதது இது என்று படித்திடுவோர் கருதிவிடத்தக்க விதமாகக் கதை அமைந்துவிடக்கூடாது என்ற எண்ணம் ஏற்பட்டு, வெள்ளை மாளிகையில் ஆட்சி அதிபராக அமரும்படி, அமெரிக்க மக்கள், நிறவெறியற்று, நிறபேதம் பார்க்காமல் ஒரு கருப்பரை, குடிஅரசுத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள் என்று எழுதவில்லை; எதிர்பாராத சில நிகழ்ச்சிகளால், ஒரு கருப்பர், வெள்ளை மாளிகையில் குடிஅரசுத் தலைவராக அமரவேண்டிய நிலை ஏற்பட்டது என்ற அளவிலேயே தமது கற்பனையை நிறுத்திக் கொண்டார்.

கற்பனை வளம் குறைவாக உள்ளவர்கள், ஒரு கருப்பர் வெள்ளை மாளிகையில் அதிபராக அமர்ந்தது போன்ற கனவு கண்டார்; அந்தக் கனவில்......என்று எழுதியிருந்திருப்பார்கள். இர்விங் வாலாஸ் நல்ல கற்பனைச் செறிவு இருப்பதால், நடந்திருக்கக்கூடும் என்று அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்க விதமான ஒரு நிகழ்ச்சிச் சூழ்நிலையைக் காட்டி, வெள்ளை மாளிகையில் கருப்பு மனிதரை இருந்திடச் செய்திருக்கிறார்.

தம்பி! அமெரிக்காவிலேயே இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நிறம் கருப்பு என்பதால், அவர்களை ஓட்டல்களில்—படக்காட்சிக் கொட்டகைகளில்—கல்விக்கூடங்களில்—மருத்துவமனைகளில்—பிரித்துவைக்கிறார்கள்; இத்தனைக்கும் இப்படிச் செய்யக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. நீக்ரோக்களுக்குக் கல்விக் கூடங்களில் வெள்ளையருடன் சேர்ந்து படிக்க சட்டம் உரிமை அளிக்கிறது; ஆனால் நிறவெறி தடுக்கிறது; போலீஸ் துணையுடன் மட்டுமே கருப்பு மாணவர்கள் அந்த கல்விக் கூடங்கள் செல்ல முடிகிறது. அங்கு தரப்படும் பாடமோ, "அனைவரும் சமம்" என்பது. எத்தனை போலித்தனமான நடவடிக்கை!! எத்தனைக் காலமாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது! தலைமுறை தலைமுறையாக இந்தக் கொடுமையை அனுபவித்துக் கொண்டுவரும் நீக்ரோ மக்கள், வெள்ளையரிடம் எப்படித்தான் 'நட்புறவு' காட்டமுடியும்! பெரும்பாலும் முடிவதில்லை; காட்டப்படும் 'நட்புறவில்' பெருமளவு 'நடிப்பாக'வே இருந்துவருகிறது. வேறு எப்படி இருக்க முடியும்?

அன்புரை, அறிவுரை, விளக்கஉரை எல்லாம் ஏடுகளிலே நிரப்பித் தந்துள்ளனர்; இப்போதும் தந்தபடி உள்ளனர்.

அமெரிக்காவில் 'நீக்ரோக்கள்' பற்றி 'முற்போக்காளர்' கூடத் தமது கருத்தினைக் கூறும்போது, அங்குள்ள நிறவெறியர்களின் ஆத்திரத்தை அதிக அளவில் கிளறிவிடாத முறையிலே பக்குவமாகவே கூறவேண்டி நேரிட்டது. அதற்கே 'புருவத்தை நெறிப்போரும்' 'புண்படப் பேசுவோரும்' தாக்க வருவோரும் கிளம்புவர்.

'நீக்ரோக்கள்' மனித இனத்திலே தாழ்ந்தவர்கள்; அமெரிக்கர்களைவிட 'மட்டம்' அது இயற்கைச்சட்டம்; இறைவன் திட்டம் என்று பேசிடுவோர் அறிவாலயங்களென்று கூறப்படும் பலகலைக் கழகங்களிலே பேராசிரியர்களாக இருந்திடும் நிலை.

'நீக்ரோக்கள்' அமெரிக்கரின் 'உடைமைகள்' எனவே அவர்களுக்கு மனித உரிமைகள் தரப்பட்டிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டியது அல்ல நமது கடமை, சொத்து உரிமை சட்டத்தின்படி நடவடிக்கை இருக்கிறதா என்று பார்க்கவேண்டியதே நமது கடமை என்று பேசிடும் சட்ட நிபுணர்களைத் தாங்கிக்கொண்ட நாடு அமெரிக்கா.

"என் உடைமை! இதனை நான் எதுவும் செய்வேன். கூடத்திலும் வைத்திருப்பேன், குப்பைமேட்டிலும் வீசுவேன், இரவல்கொடுப்பேன் அல்லது இன்னொரு பொருளுக்கு ஈடாக மாற்றிக்கொள்வேன், அல்லது உடைத்தெறிவேன்; என் விருப்பப்படி செய்வேன்; இது என் உடைமை!'' என்று வீடுகாடு, மாடு வண்டி, குதிரை ஆடு, போன்ற உடைமைகள் குறித்துப் பேசும்போது, ஒருவருக்கும் அந்தப் பேச்சு அக்ரமமானது என்றுத் தோன்றுவதில்லையல்லவா. அமெரிக்காவில்—இன்று அல்ல, முன்பு—நீக்ரோக்கள் உயிருள்ள ஜீவன்கள் அல்ல உரிமைபெற்ற மாந்தர் என்று அல்ல, வெறும் உடைமைகள் என்றே கருதப்பட்டு வந்தது.

கர்த்தரின் சம்மதம் இந்த ஏற்பாட்டுக்கு உண்டு என்று உபதேசம் செய்தவர்களும், இது நாம் இயற்றியுள்ள சட்டம் என்று வாதாடி வெற்றி பெற்றவர்களும் இருந்து வந்ததுகூட வியப்பல்ல, ஆமாம்! நாம் 'ஐயா'வின் 'உடைமை'தான், என்ன செய்யவும் அவருக்கு உரிமை உண்டு என்று நம்பிக்கிடந்திடும் நிலையில் நீக்ரோக்களும் இருந்தனர்! திடுக்கிடச் செய்திடும் வியப்பு இஃதன்றோ.

தம்பி! அமெரிக்காவில் அந்த நாட்களிலே இருந்து வந்த முறைபற்றியும், நிலைமைபற்றியும் வெளிவந்துள்ள பல ஏடுகளிலே ஒன்று 'டிரம்' (முரசு) என்ற பெயர்கொண்டது. இதிலே அப்பன், மகன், அவன் மகன் என்று மூன்று தலைமுறையினரின் வாழ்வு விளக்கப்பட்டிருக்கிறது. வாழ்வா அது? இரத்தக் கண்ணீர் விடவேண்டும் அந்த வேதனையை உணரும்போது.

'டிரம்' என்பவன், ஆப்பிரிக்க நீக்ரோ—இளைஞன்—கட்டுடல்! அங்கு அவன் ஒரு அரசாளும் உரிமை பெற்ற மரபினன்கூட. அவனை அடிமை வியாபாரிகள் பிடித்திழுத்துக்கொண்டுபோய் விற்றுவிடுகிறார்கள்; அமெரிக்கப் பண்ணையாருக்கு!

அமெரிக்காவில், பருத்தி கரும்புப் பண்ணைகள் அமைத்து பொருள் குவித்தனர்—அங்கு பாய்ச்சசப்பட்டது தண்ணீர் மட்டுமல்ல—நீக்ரோக்களின் இரத்தமும் கண்ணீரும் கூடத்தான். அப்படி ஒரு பண்ணையில் 'டிரம்' பாடுபட்ட சோகக் காதைதானே இது என்று எண்ணுகிறாயா தம்பி! அதுதான் இல்லை. இந்த 'டிரம்' வேலை செய்தது. விந்தையான வேறோர் பண்ணையில்! உற்பத்திப் பண்ணையில்! விளங்கவில்லையா? விளங்காது சுலபத்தில், விளங்கினாலோ வேதனை உணர்ச்சி அடங்க நெடுநேரம்பிடிக்கும்.

ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோக்களை வேட்டையாடிப் பிடித்துக்கொண்டுவந்து அமெரிக்காவில் விற்றுப் பொருள் குவித்துவந்தனர் கொடியவர்கள்—கொடியவர்கள் என்று இப்போது கூறிவிடுகிறோம்—அப்போது அவர்கள் வியாபாரிகள்! கடலிலே வலைவிசி மீன் பிடித்து விற்பதில்லையா, பறவைகளைப் பிடித்து விற்பதில்லையா, மான்களையும் காட்டுப் பன்றிகளையும், வேட்டையாடிக் கொன்று அந்த இறைச்சியை விற்பதில்லையா, அதுபோலத்தான் அடிமை வாணிபம் அனுமதிக்கப்பட்டு வந்தது. எனவே அதிலே ஈடுபட்டவர்களைக் கொடியவர் என்று அந்த நாட்களில் கூறுவதில்லை.

விலைகொடுத்து வாங்கிய அடிமை உழைத்து உழைத்து ஓடாகி, உருக்குலைந்து, நோயால்தாக்குண்டு இறந்துபோய்விட்டால், பண்ணையார் மறுபடியும் சந்தைக்குச் சென்று வேறு அடிமைகளை விலைக்கு வாங்கிக் கொள்வார். நாளாகவாக இந்த அடிமைகளை ஆப்பிரிக்காவிலே இருந்து கொண்டுவந்து விற்பதற்கு ஆகும் செலவு அதிகமாகிக்கொண்டுவந்தது; புதிதாக அடிமைகளை வாங்க அதிகப்பணம் செலவிடவேண்டி வந்தது. அடிமைகள் உழைத்து உருக்குலைந்து போவதால், நாளாகவாக அவர்களின் வேலைத்திறம் குறையலாயிற்று. தலைமுறைக்குத் தலைமுறை தேய்ந்து கொண்டுவந்தனர். அந்தப் பழய கட்டுடல், தாக்குப்பிடிக்கும் வலிவு குறைந்துகொண்டே வந்தது.

அதிகச் செலவு, வலிவிழந்தநிலை ஆகிய இரண்டையும் கண்ட ஒரு வெள்ளை பண்ணைமுதலாளி, புதுத் திட்டம் வகுத்தான். ஆப்பிரிக்காவிலிருந்து புதிது புதிதாக, தொகை தொகையாக நீக்ரோக்களைப் பிடித்துக் கொண்டுவருவதைவிட, அமெரிக்காவிலே இடம் பெற்றுவிட்ட நீக்ரோக்களைக்கொண்டே, உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டால் என்ன? அமெரிக்காவிலுள்ள நீக்ரோக்களிடையே 'பிறப்பு' அதிகமானால், புதிய புதிய அடிமைகள் கிடைப்பார்களல்லவா என்று எண்ணினான். அதன் விளைவாகத்தான் அந்த ஆசாமி, 'நீக்ரோ உற்பத்திப் பண்ணை' அமைத்தான்;

கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, மாட்டுப் பண்ணை நடத்துபவர்கள் தரமான ஜோடிகளை இணைத்து, உற்பத்தியின் அளவையும் தரத்தையும் பெருக்குகிறார்கள் அல்லவா, அதுபோல கட்டுடல் படைத்த தரமான நீக்ரோ இளைஞர்களைப் பருத்திக்காடுகளிலே வேலைசெய்யச்சொல்லி கசக்கிப்பிழிவதைவிட, அவர்களை ஊட்டம் கொடுத்து வளர்த்து, வலிவும் பொலிவும் மிகுதியாகும்படிச்செய்து, அவர்களை நீக்ரோ பெண்களுடன் உறவு கொள்ளச்செய்து, உற்பத்தியைப் பெருக்குவது என்று திட்டமிட்டான். இதிலே அந்த ஆசாமி தன் திறமை முழுவதையும் செலவிட்டு, நல்ல தரமான நீக்ரோக்களைத் தமது பண்ணையில் உற்பத்திசெய்து, விற்பனை செய்துவந்தான், நீக்ரோ பெண்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உடல் பாழாகும்படியான கடினமான வேலைகொடுக்காமல், வலிவளிக்கும் உணவு அளித்து தனி விடுதிகளில் இருந்திடச்செய்து, அதுபோன்றே கட்டுடல் படைத்த நீக்ரோ வாலிபனைத் தேர்ந்தெடுத்து அந்த

விடுதிகளில் 'விருந்தினராக' இருந்திடச்செய்வது, உறவுபெற்றவள் கருவுற்றதும்; அவனை வேறு விடுதிக்குச் சென்றிட உத்திரவிட்டுவிடுவது, வேறு விடுதி அந்தச்சமயம் இல்லையானல், ஆடவர் பகுதியில் 'தக்க சமயம்' வருகிறவரையில் இருந்திடச் சொல்வது; கருவுற்றவளுக்கு வலிவு குன்ருதிருக்கத்தக்க உணவளித்து வருவது, குழந்தை பிறந்ததும், சிறிது காலம் தாயுடன் இருந்திடச் செய்துவிட்டு, பிறகு குழந்தைகள் வளர்ப்பு இடத்திற்கு எடுத்துச் சென்று வளரச் செய்வது!! இப்படி ஒரு பண்ணையே நடத்துனன் அந்தப் பாதகன்.

கணவன்—மனைவி என்ற உரிமைத் தொடர்போ, தாய்—மகன் என்ற பாசத் தொடர்போ ஏற்படவிடுவதில்லை; ஆண்—பெண்—குழந்தை என்றஒரு 'தொடர்' ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது அந்தப் பண்ணையில். அடிமைச் சந்தையில், இந்தப் பண்ணையில் தயாரிக்கப்பட்ட 'அடிமை' என்ருல் கிராக்கி அதிகம்; பேசிக்கொள்கிருர்கள் அல்லவா புங்கனூர் பசு, பழய கோட்டை காளை, மூரா எருமை என்று 'ரகம்'பற்றி! அதுபோல; இந்தப்பண்ணைக்கு ஒரு பெயர்!!

இந்தப் பண்ணையில் வந்து சேருகிருன் தம்பி! 'முரசு' என்ற நீக்ரோ வாலிபன்! அடிமைச் சந்தைக்கு 'ஆட்களை'ப் பெற்றுக் கொடுக்கும் வேலைக்காக.

அவன் பட்டபாடு; அவன் மகன், பேரன் ஆகியோர் கண்ட அவதிகள் அந்த நூலிலே விளக்கப்பட்டிருக்கிறது. நான் முழுவதும் கூறப்போவதில்லை; நீக்ரோக்கள் விஷயமாக என்னென்ன வகையான ஈனத்தனமான கொடுமைகள் இழைக்கப்பட்டன என்பதனை எடுத்துக்காட்ட மட்டுமே 'டிரம்' பற்றி ஏட்டினைக் குறிப்பிட்டுக் காட்டினேன். அத்தகைய நீக்ரோ ஒருவன், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக அமர்ந்து அரசோச்சுவது என்ருல், அதிர்ச்சி அளிக்கத்தக்க அதிசயமல்லவா!! 'மனிதன்' எனும் ஏடு அந்த அதிசயத்தை அல்ல, குடிஅரசுத தலைவரான கருநிறத்தான் எனனென்ன அல்லலுக்கும் ஆபத்துக்களுக்கும், இன்னலுக்கும் இழிவுகளுக்கும், சூது சூழ்ச்சிக்கும் ஆளாகுன் என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பொறுத்தார் பூமியாள்வார்; கல்வி எவரையும் உயர்த்தும்; காலம் மெள்ள மெள்ள, ஆனல் உறுதியாக மாறித் தீரும் என்று அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. தாழ்ந்த இனம் அல்லது தாழ்த்தப்பட்ட இனம், தத்தளிக்கும் சமூகம் என்ற நிலை இருப்பினும், அதிலேயும் நல்முத்துக்கள் தோன்றிடின் மதிப்பளித்தே தீருவர் என்று பேசி மகிழ்வர், தீவிரமான மாறுதலைத் திட்டமிட்டு ஏற்படுத்தத் துணிவற்றவர்கள்; மனமற்றவர்கள்; வழி அறியாதவர்கள். தமது வாதத்தை வலிவுள்ளதாக்கிட, உழைப்பால் உயர்ந்த உத்தமர்களின் கதைகளை ஆதாரமாகக் கூறுவர். அவ்விதமான 'மணிகள்' நீக்ரோ சமுதாயத்திலே தோன்ருமலில்லை; உயர் பதவிகளிலே அமர்ந்து நற்பெயர் ஈட்டாமலில்லை. ஆனல் அவர்கள் வகித்த பதவி தந்திடும் மயக்கத்தில் தம்மை மறந்து அத்தகைய 'கருப்பர்களை'ப் பாராட்டினுர்களேயன்றி, கருப்பர் இனத்தை அல்ல! கருப்பரிலும் இத்தகையவர்கள் உள்ளனரே என்று வியந்து பேசினர். கருப்பரிலா இப்படிப்பட்டவன் தோன்ற முடிந்தது! என்றும், இந்த நிபுணன் நீக்ரோ இனமா? உண்மையாகவா? விசித்திரமாக இருக்கிறதே என்றும் பேசுவதை வாடிக்கையாக்கிக் கொண்டனர்.

வெள்ளை நிற வெறியர் இதுபோலக் கருதினர் என்ருல், நீக்ரோக்களில் புரட்சி எண்ணம் கொண்டவர்கள், தம் இனத்திலே ஒரு சிலர் இவ்விதமான 'உயர் இடம்' பெறுவது, இனத்தின் விடுதலைக்கோ மேம்பாட்டினுக்கோ பயன்படவில்லை. அதற்கு மாருக, மேலும் அந்த இனத்தை அழுத்திவைக்கவே பயன்படுகிறது; பலர் கோடரிக்காம்புகளாக்கப்படுகின்றனர்; அவர்களை உலகுக்குக் காட்டி நீக்ரோ இனம் ஒரு குறையுமின்றி வாழுகிறது என்று உலகுக்குக் கூறி உண்மை நிலைமையை மறைத்து விடுகின்றனர்; கழுத்துப் புண்ணை மறைத்திட (மாட்டின் கழுத்தில்) கட்டப்படும் வெண்கலமணி போன்றவர் இவர்! என்று கருதினர்; கூறிவந்தனர்.

புக்கர் டி. வாஷிங்டன் கல்வித் துறையில் பணியாற்றிய வித்தகர்; நீக்ரோ; சோர்ந்த உள்ளம் கொண்டவர்களுக்குப் புக்கர் டி.வாஷிங்டன் வரலாற்றை எடுத்துரைத்து, தன்னம்பிக்கையுடன் பணியாற்றி வந்தால், தகுதிகளைத் தேடிப் பெற்ருல், மேம்பாடு அடைய முடியும், சமூகத்தில் உயர்ந்த மதிப்புப் பெற்றிட முடியும் என்று எடுத்துக்காட்டாத அறிவாளர் இல்லை என்று கூறலாம். அவ்விதம் 'எடுத்துக் காட்டு'க்குப் பயன் பட்டவர் புக்கர் டி. வாஷிங்டன்; கருநிறத்தவர்.

பள்ளிக்கூடங்களில் பாடப்புத்தகமாக்கப்பட்டிருக்கிறது புக்கர் டி. வாஷிங்டன் வாழ்க்கை வரலாறு.

எபிநேசர் பேசெட், ஜொனுதன் ரைட், ஜெபர்சன் லாங், பிளான்ச் ப்ருஸ், ராபர்ட் வீவர், பிரடரிக் மாரோ, ரால்ப் ப்ன்ச், ஆண்ட்ரு ஹாட்சர், கார்ல் ரோவன், இப்படிப் பட்டியல் இருக்கிறது. பல்வேறு துறைகளிலே வித்தகர்களாக விளங்கிய நீக்ரோக்களைப் பற்றி. எனினும் இந்த நிலைமை, உழைத்தால் உயரலாம், தகுதியைத் தேடிப் பெற்றுக் கொள்ளலாம் என்ற பாடங்



H.O. பெரியகுளம், பாக்டரி: திண்டுக்கல்.

களைப் போதிக்கப் பயன்பட்டனவேயன்றி, நீக்ரோ சமுதாயத்தைப் பிறவி காரணமாகவே, நிறம் காரணமாகவே வெறுத்தொதுக்கியும் இழித்தும் பழித்தும் இன்னல் விளைவித்தும் வந்த வெள்ளை வெறியரின் போக்கை மாற்றிடப் பயன்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் வெள்ளை மாளிகைக்கு ஒரு கருநிறத் தலைவர்! என்கிறபோதுதான், வியப்புடன் கூடிய வெடவெடுப்பு எடுக்கிறது நிறவெறியர்களுக்கு.

எங்கு ஆண்டு இந்த அதிசய நிகழ்ச்சி நேரிட்டது என்று நூலாசிரியர் குறிப்பிடவில்லை; அமெரிக்காவில் இன்றுள்ள மனப்போக்கைக் கொண்டு இதற்கான ஒரு 'நாள்' முன்கூட்டிக் குறிப்பிடுவது இயலாது என்பதால் போலும்.

கென்னடி, அதற்குப் பிறகு லிண்டன் ஜான்சன் ஆகியோர் காட்டும் உறுதி கலந்த போக்கைக் கவனிக்கும்போது, எல்லாத் துறைகளிலும் நீக்ரோக்கள் சம உரிமை பெற்றுவிடுவது வெகுவிரைவில் என்று எண்ணிடத் தோன்றுகிறது. ஆனால் வெறியர்கள் இன்றும் நடாத்திவரும் கொடுமைகளைப் பார்க்கும்போது எத்தனைத் தலைமுறைகள் பிடிக்குமோ நீக்ரோக்கள் மனித உரிமை பெற்றிட என்று திகைத்திடத் தோன்றுகிறது.

என்றோ ஓர் நாள், வெள்ளை மாளிகையில், ஆட்சித் தலைவராக ஒரு கருநிறத்தவர் நுழைந்தால், நிலைமைகள் என்னென்ன வடிவமெடுக்கக் கூடும், எங்கெங்கு புற்றிலிருந்து என்னென்ன அரவு கிளம்பி வந்து தீண்டக்கூடும் என்பது பற்றி, 'கற்பனையாக', ஆனால் எல்லையற்ற பெருவெளியிலே பறந்திடாமல், ஆசிரியர் கதையொன்றைத் தீட்டித் தந்திருக்கிறார்.

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் தமது பதவிக்காலத்தில் இறந்துபடுவாரானால், உடனடியாகத் துணைத் தலைவர் தலைவராக்கப்படுவார். இது அங்கு மரபு. அந்த மரபின்படிதான், கென்னடியைக் கொடியோன் சுட்டுக் கொன்றதும், அப்போது துணைத்தலைவராக இருந்து வந்த லிண்டன் ஜான்சன் குடிஅரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

கென்னடி இருந்திருந்தால் எவ்வளவு நாட்கள் குடிஅரசுத் தலைவராக இருந்திருப்பாரோ, அந்த நாள் வரையில் துணைத்தலைவராக இருந்த ஜான்சன் தலைவராகப் பணியாற்றினார்.

பிறகு புதிய தேர்தல் வந்தது. அதிலே ஈடுபட்டு, ஜான்சன் தேர்ந்தெடுக்கப்பட்டு இப்போது குடிஅரசுத் தலைவராக இருந்து வருகிறார்.

குடிஅரசுத் தலைவர் இறந்துபடும்போது, 'இடைக்கால'த் தலைவராக, துணைத்தலைவர் நியமிக்கப்படுகிற மரபின்படி, பலர் தலைவராகப் பணியாற்றியுள்ளனர்.

அவனி புகழ் நிலைபெற்ற ஆபிரகாம் லின்கன் ஒரு கொடியவனால், நாடக அரங்கமொன்றில் சுட்டுக் கொல்லப்பட்டதனை, தம்பி! அறிந்திருப்பாய். அப்போதும், துணைத்தலைவர், தலைவராக்கப்பட்டார்.

ஆரிசன், டைலர், கார்பீல்டு, மக்ஸ்லீ, ஆர்டின்சு, ரூஸ்வெல்ட், இப்படிப் பலர், தலைவர் பதவியில் இருந்தபடியே உயிர் நீத்தனர். அப்போதெல்லாம், துணைத் தலைவர்களே தலைவர்களாயினர்.

இந்த 'மரபை' சற்று விரிவுபடுத்தி, அதன் அடிப்படையிலேதான், தமது கற்பனையை அமைத்திருக்கிறார் இர்விங் வாலாஸ்.

தலைவர் இறந்துபட்டால், துணைத்தலைவர், துணைத் தலைவரும் இறந்துபட்டால்? பாராளுமன்றத் தலைவர்! அவரும் இறந்துபட்டால்? பாராளுமன்ற மேலவைத் தலைவர்! இப்படி ஒரு மரபுபற்றி ஆசிரியர் குறிப்பிட்டுக் கொண்டு, தமது 'கற்பனையை'க் கட்டியிருக்கிறார்.

மேலவைத் தலைவர், குடிஅரசுத் தலைவராகும் நிலை எப்போது ஏற்படுமென்றால், எதிர்பாராத வகையில் தமது பதவிக்காலத்தின்போதே, ஒரே சமயத்தில், குடிஅரசுத் தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகிய மூவரும் இறந்துபட்டிருக்க வேண்டும்.

அவ்விதமான ஒரு சூழ்நிலையை நம்பத்தகாத முறையில் அல்ல, இருக்கக்கூடும் என்று எவரும் கூறிடத்தக்க விதத்தில், 'மனிதன்' என்ற ஏடு உருவாக்கிக் காட்டுகிறது.

திடீரென்று அமெரிக்கக் குடிஅரசின் துணைத் தலைவர் இறந்துபடுகிறார், குடிஅரசுத் தலைவர், நண்பர் இறந்ததால் ஏற்பட்ட துக்கத்தைத் துடைத்துக் கொள்ளவும் நேரமின்றி, ஐரோப்பாவில், பிரான்சு நாட்டில் ஓர் ஊரில், சோவியத் அதிபரைச் சந்தித்து ஆப்பிரிக்கப் பிரச்சினைபற்றிப் பேசவேண்டி ஏற்பட்டுவிடுகிறது. அந்த மாநாட்டுக்குச் சென்றிருக்கிறார். அமெரிக்கத் தலைநகரில், மற்ற அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் இருக்கின்றனர். அவர்களுடன், மாநாட்டு இடைவேளையில், 'தொலைபேசி' மூலம் பேசுகிறார், குடிஅரசுத் தலைவர் — சோவியத் அதிபரின் போக்குப்பற்றி, தான் மேற்கொள்ள இருக்கும் ராஜதந்திரம்பற்றி, கேட்டு, வியப்படைவதும், தமது கருத்துக்களைக் கூறுவதும் மேலும் விளக்கம் கேட்பதுமாக — அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் இருக்கையில், 'தொலைபேசி' நின்றுவிடுகிறது; ஏதோ இயந்திரக்கோளாறு. பதைபதைக்கிறார்கள், பாதியிலே பேச்சு நின்றுவிட்டதே என்று. நிமிடங்கள் ஆண்டுகள்போல நகருகின்றன. பிரான்சிலே, குடிஅரசுத் தலைவர்; வாஷிங்டனிலே அவருடைய பேச்சைக் கேட்க ஆவலுடன் காத்திருக்கும் ஆட்சிக்குழுவின் பல்வேறு தரமுள்ள அதிகாரிகள்.

“அய்யோ” என்று அவர்கள் அலறும்படியான செய்தி வருகிறது தொலைபேசி மூலம். நம்ப முடியவில்லை; அதிர்ச்சி; குழப்பம்; கலக்கம்.

தொலைபேசி தெரிவிக்கிறது, குடிஅரசுத் தலைவர் திடீரென்று இறந்துவிட்டார். மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, மாளிகையின் மேற்பகுதி இடிந்து விழுந்துவிட்டது. அந்த இடத்திலேயே குடிஅரசுத் தலைவர் மாண்டுபோனார்!

தம்பி! எப்படி இருக்கும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால், கதை என்பதால் உருக்கம் அந்த அளவுக்கு வராது; எனினும், எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதனை நாம் உணர்ந்துகொள்ளும் விதமாக அல்லவா, தாஷ்கண்டில் லால்பகதூர் மறைந்த செய்தி தாக்கிவிட்டது.

வாஷிங்டனில், குடிஅரசுத் தலைவர் நடாத்தும் மாநாட்டின் தகவல் அறிந்துகொள்ள தொலைபேசி பக்கத்தில் திரள்கிறார்கள் அதிகாரிகள், அமைச்சர்கள், அவர்களுக்குக் கிடைப்பதோ, குடிஅரசுத்தலைவர் இறந்துபட்டார் என்பது.

துணைத்தலைவரோ ஏற்கனவே மறைந்துபோனார்! தலைவரோ, பிரான்சிலே பிணமாகிக்கிடக்கிறார். எத்தனை சோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியும்! தத்

தளித்தனர். அந்த தத்தளிப்புக்கு இடையிலேயே 'மரபு' குறிப்பிடுகிறபடி பாராளுமன்றத்தலைவர், குடி அரசுத் தலைவராகப் பொறுப்பேற்கவேண்டுமே! அவருடைய முதல் அலுவலே, அந்தோ! முன்னாள் குடி அரசுத் தலைவரின் உடலை, வரவேற்று, உரிய முறையில் அடக்கம் செய்து, அனுதாபம் தெரிவிப்பதாக அமைகிறது. என்ன செய்வது! அவர்போன்ற ஒரு தலைவரை மறுபடியும் எங்கிருந்து பெறமுடியும்! பத்து நிமிடங்களுக்கு முன்பு, எவ்வளவு உற்சாகமாகப் பேசினார், 'தொலைபேசி' மூலம். வேடிக்கை மூட்டுகிற முறையிலேகூடப் பேசினாரே! இப்போது!! என்று எண்ண எண்ண அவர்கள் மனம் சுக்குநூறுகிறது. ஆயினும் அரசு நடைபெற்றாகவேண்டுமே, என வேதுக்கம், உள்ளத்தைப் பிய்த்துக்கொண்டிருக்கும் நிலையிலும், "சேதி அனுப்புக! உடனடியாக! பாராளுமன்றத் தலைவரை, குடிஅரசுத் தலைவராக்கும் சட்ட ஒழுங்கு நடைபெற்றாகவேண்டுமே! கூப்பிடுக அவரை!" என்றார் ஓர் அமைச்சர். "அவர் இங்கு எங்கே இருக்கிறார்? அவருமல்லவா, மாநாட்டில் கலந்துகொள்ள, குடி அரசுத் தலைவருடன் சென்றிருக்கிறார்" என்று விவரமளிக்கிறார் வேறொருவர். மீண்டும் பரபரப்பு, பதைப்பு! விபத்து நடந்தபோது 'அவர்' எங்கே இருந்தார்? அவருக்கு எதுவும் நேரிடவில்லையே! என்ற பதைப்புப் பேச்சு. தொலைபேசி வேலை செய்கிறது. அடிபட்டவர்களில் அவரும் ஒருவர். ஆனால் உயிர் போகவில்லை. மருத்துவமனையில் கிடத்தப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைக்கிறது. இவ்வளவு கேடுகளுக்கிடையில் இந்தஒரு நல்ல செய்தியாவது கிடைத்ததே! அவருக்கு ஒன்றும் இல்லை! மருத்துவமனையில் இருக்கிறார், காயம்; அவ்வளவுதான் என்று ஒருவருக்கொருவர் கூறிக்கொண்டு தைரியத்தைத் தருவித்துக்கொண்டிருக்கும் போதேஅவர்கள் அனைவரையும் அடித்துக்கீழே தள்ளிவிடத்தக்க தாக்குதலை நடத்திற்று தொலைபேசி; அவரும் இறந்துபட்டார், மருத்துவமனையில்" என்ற செய்தியைத் தெரிவித்து.

ஒரு அடி விழுந்ததும் மற்றொன்று; அதைத் தொடர்ந்து இன்னொன்று விழுவதுபோல, கொடுமையான செய்திகள் கிடைத்தன. அவர்கள் திகைத்தனர் தேம்பினர், தத்தளித்தனர். இப்படியா ஒரு சங்கிலித் தொடர்போல இழப்புகள்! எப்படித்தான் ஒருநாடு 'இவ்வளவை'த் தாங்கிக்கொள்ளும். தலைவர், துணைத்தலைவர்; பாராளுமன்றத் தலைவர், மூவருமல்லவா மறைந்தனர்! இனி, இனி......?" என்று கண்ணீர் பொழிந்த நிலையினர் குமுறினர்; "இனி, குடிஅரசுத் தலைவராக வேண்டியவர், பாராளுமன்ற மேலவைத் தலைவர்!" என்றார் ஒருவர்; அவர் யார், என்பதுபற்றிய நினைப்பு மற்ற நிலையில் சோகத்துடன் 'ஆம்' என்றனர் மற்றையோர். அந்த மேலவைத் தலைவர்தான் தம்பி டக்ளஸ் டில்மன் எனும் ஒரு நீக்ரோ!!

எப்படிப்பட்ட சூழ்நிலையைத் தீட்டி, ஒரு நீக்ரோவைக் குடிஅரசுத் தலைவர் ஆக்கிக் காட்டியுள்ளார் ஆசிரியர் பார்த்தனையா!!

தகுதியற்ற ஒருவர் தலைமைப் பதவியைச் சூழ்ச்சித் திறத்தால் பிடித்துக்கொண்டுவிட்டால், பிறகு தகுதி மிக்கவர்களும் அச்சத்தால் தாக்கப்பட்டு, அடிபணிந்து கிடக்கின்றனர், காண்கின்றோம்.

டக்ளஸ் டில்மன், காட்டிலே திரிந்துகொண்டிருந்த ஒரு தற்குறி அல்ல, நாட்டு ஆட்சி மன்றத்தில் ஒன்றான செனட் சபையின் தலைவர். தகுதி காரணமாக அந்த நிலை பெற்றார். வழக்கறிஞர், போதுமான அளவு வசதி பெற்றவர்; புகழ் ஈட்டிக்கொண்டவர். பதவிப் பசி கொண்டவரல்ல. எதிர்பாராத அழைப்பு! எட்டி எட்டிப் பார்த்தாலும் தொட்டுப் பார்த்திட முடியாத ஒரு பதவியில் அவர் 'நிலைமை'யால் இழுத்துச் சென்று அமர்த்தப்படவேண்டி ஏற்படுகிறது.

டக்ளஸ் டில்மன்—செனட் தலைவர்! அப்படியென்றால்? மரபு கூறுகிறது, அவர்தான் குடிஅரசுத் தலைவர் வேலை பார்க்கவேண்டும் என்று. குடிஅரசுத் தலைவராகவா? ஒரு நீக்ரோவா?

செனட் சபையின் தலைவர் டக்ளஸ் டில்மன்!

ஆமாம்! அவர் ஒரு நீக்ரோ! கருநிறத்தான்! கனவானாக இருக்கலாம், கற்றறிவாளனாக இருக்கலாம்! வழக்கறிஞராக இருக்கலாம்! ஆனால், அவர் ஒரு நீக்ரோ!!

மரபு இருக்கிறதே, தலைவர், துணைத்தலைவர், பாராளுமன்றத் தலைவர் ஆகியோர் இறந்துபடின், செனட் சபைத் தலைவரே, குடிஅரசுத் தலைவராக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று.

மரபு அது! ஆமாம்! ஆனால் டக்ளஸ் டில்மன் ஒரு நீக்ரோ!, ஒரு நீகரோவா, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராவது! எந்த அமெரிக்காவில் அடிமையாகக் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டானோ அந்த நீக்ரோவின் வழிவழி வந்தவன், அந்த இனத்தவன், அவன்


ஆயுர்வேத வைத்திய

உரிமையாளர்
M. அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்

54, சோலை ஹால்ரோடு • திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், சேவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

'கருங்குரங்கு ரஸாயனம்'

மற்றும்

'மதுகாசவம்'

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

படித்தவனாக இருக்கட்டும், பண்புள்ளவனாக இருக்கட்டும், மரபு ஆயிரம் கூறட்டும், அந்த நீக்ரோ, அமெரிக்கக் குடிஅரசின் தலைவனாகப் பதவி ஏற்பதா! அதை அனுமதிக்கலாமா! வெள்ளை இனத்தவர் ஏற்றுக்கொள்வார்களா! யார் உங்கள் குடிஅரசுத்தலைவர் என்று உலகினர் கேட்கும்போது, எப்படி மனம் ஒப்பி, ஒரு நீக்ரோ கனவான் எமது தலைவராக இருக்கிறார் என்று கூற முடியும். மாநாடு நடத்தச் சென்ற குடிஅரசுத் தலைவரைச் சாகடித்ததே, மண்டபம் இடிந்துவிழுந்து, அது அவரைமட்டும் அல்லவே, நமது இனத்தின் மானத்தையே அல்லவா நொறுக்கிவிட்டிருக்கிறது. வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர்!! காது குடைகிறதே கேட்கும்போதே; இரத்தம் கொதிக்கிறதே கோபத்தால்; கண்கள் இருளடைகின்றனவே அதிர்ச்சி தரும் மயக்கத்தால்! டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடி அரசுக்குத்தலைவரா!! ஆமாம்! மரபு கட்டளையிடுகிறதே! எப்படி அந்தமரபை மீறமுடியும்? ஆனால் எப்படி, ஒரு கருப்பரைத் தலைவராகக்கொள்ளமுடியும்? எப்படித் தாங்கிக்கொள்ளமுடியும்.

சவுக்கடிபட்ட இனம்! கட்டிவைத்து சுட்டுக் கொல்லப்பட்ட இனத்தினன்! நமது வேட்டை நாய்கள் இவன் இனத்தவனை முன்பு துரத்தித் துரத்திக் கடித்திட, கடிபட்டவன் கதறிக் கதறித் துடித்திட, வெள்ளைச் சீமாட்டிகள் காட்சியினைக் கண்டு கண்டு கைகொட்டிச் சிரித்தனர் முன்பு! அந்த இனத்தைச் சேர்ந்த ஒருவன் — நீக்ரோ — ஆட்சித்தலைவனா! நமக்கா!!

இப்போது நீக்ரோ அடிமை அல்ல! சந்தைச் சதுக்கத்திலே அவனைக் கட்டிவைத்து அடிக்க, சட்டம் இடம் கொடுப்பதில்லை. இப்போது அவன் அங்காடிப் பொருள் அல்ல; ஆபிரகாம் லின்கன், அடிமை முறையை ஒழித்ததால். ஆனால் இப்போதும் நீக்ரோ தானே! அடிமை அல்ல! ஆனால் கருநிறம்! மட்டம்! தாழ்வு! அந்த இனத்தவனல்லவா, டக்ளஸ் டில்மன்.

இப்போதும், வெள்ளை இனத்தின் உயர்விலும் தனித தன்மையிலும் நம்பிக்கைக் கொண்டவர்கள், கருப்பர்களைப் பள்ளிகளில், விடுதிகளில், படக்காட்சிக் கொட்டகைகளில் சேர்க்கமாட்டார்களே! ஒதுக்கித் தானே வைத்திருக்கிறார்கள்! ஓரத்தில்தானே இன்றும் தள்ளப்பட்டுக் கிடக்கிறான். உழைக்கிறான் என்பதால் வேலை தருகிறோம்; வேலை செய்வதால் நாம் நடமாடும் இடத்தில அவனும் நடமாடுகிறான! ஆனால் நாமும் அவனும் ஒன்று!! ஒப்புக்கொண்டு விடடோமா? இல்லையே! வேட்டையாடிப் பிடிப்பது, சங்கிலிகளால் பிணைப்பது, சந்தையிலே நிறுதத்தி வைத்து விற்பது, சவுககாலடிப்பது, இவை இலலை! கூடாது என்கிறது சட்டம்; அதனால். ஆனால் வெள்ளை வெள்ளைதான, கருப்பு கருப்புதானே! வெள்ளை ஆளும் இனம்! கருப்பு, அடிமை இனமதானே! உயர உயரப பறந்தாலும் ஊர்க்குருவி பருந்து ஆகிவிடுமா! நீகரோ, படிப்பால், பணததால், பட்டததால, வெள்ளையனாகி விடுவானா. அமெரிக்காவில் பிறநதான், வளர்ந்தான் என்பதாலேயே அவன் அமெரிக்கனாகி விடுவானா! அமெரிககன் என்று மக்கள் தொகைக் கணக்குக்காகக் கூறினாலும் நீக்ரோ வெள்ளையன் ஆகிவிடுவானா! அமெரிககா, எவருடைய நாடு? வெள்ளையர் நாடு! வெள்ளையர் நாட்டுக்கு ஒரு கருப்பர் தலைவராவதா!!

தம்பி! நிறவெறி கொண்டவர்களிலே, சற்று ஆத்திரத்தை அடக்கிக் கொள்ளத் தெரிந்தவர்களே இவ்விதமெல்லாம் தான் பேசியிருந்திருக்க முடியும், டக்ளஸ் டில்மன் எனும் நீக்ரோ, வெள்ளை மாளிகை அமர்ந்து குடிஅரசுத் தலைவராகப் போகிறார்; மரபு அவ்விதம் அமைந்திருக்கிறது என்று கூறப்பட்ட போது.

டக்ளஸ் டில்மன்!! குடிஅரசுத் தலைவர்; அமெரிக்காவுக்கு.

வெள்ளை மாளிகையின் கூடத்திலே குழுமியிருந்த அமைச்சர்கள், உயர்நிலை அதிகாரிகள், தமக்கு 'அதிபராக'ப் போகும் டக்ளஸ் டில்மனைப் பார்க்கிறார்கள்; சிறிது தொலைவில் நிற்கிறார் டக்ளஸ்! அவர்களின் கண்களிலே பொறி பறக்கிறது. டில்மன்? திகைத்துப் போயிருப்பார்! வேறு எப்படி நிலை இருந்திருக்க முடியும்.

மரபின்படி, உயர்நீதி மன்றத் தலைவர் வருகிறார், பதவிப் பிரமாணம் செய்துவைக்க!

பைபிள்! ஆம்! வெள்ளையருக்கு ஒன்று, கருநிறக் கிறித்தவருக்கு வேறு ஒன்று இருக்கிறது! இல்லையே! இருநிறத்தவருக்கும் ஒரே பைபிள்!

கட்டினவனே காத்திடுவான்
அமைத்தவனே பாதுகாப்பான்
அவன் துணையின்றி பாதுகாவலன்
எதையும் பாதுகாத்திட முடியாது

என்ற கருத்துகொண்ட மணிமொழியுள்ள பகுதியைத் தேர்ந்தெடுதது, அதனையே தமது 'பிரார்த்தனை'யாகப் படிக்கிறார் டில்மன்!

பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

அமெரிக்க நாட்டுக்கு அமைந்துள்ள அரசியல் சட்ட திட்டத்தையும் ஒழுங்கையும் காப்பாற்றியும் அதற்குக் கட்டுப்பட்டும் நான் ஆட்சி நடத்தி வருவேன் என்று உறுதிமொழி கூறுகிறார் டில்மன்.


"அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரே, வாழ்க! கர்த்தர் தங்களை—அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரை—அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக அமரும் முதல் நீக்ரோவைக் காத்திடுவாராக! — என்று உயர் நீதிபதி கூறுகிறார். சூழ நிற்கிறார்கள் வெள்ளை இனத்தவர்! அவர்கள் அனைவரும் எந்தக் குடிஅரசுத் தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடந்து தீரவேண்டுமோ, அந்தக் குடிஅரசுத் தலைவர் நிற்கிறார்! ஒருவரை ஒருவர் பார்க்கிறார்கள் — ஓராயிரம் வகையான எண்ணங்கள் குமுறி எழுகின்றன!

வெள்ளை மாளிகையில் ஒரு 'கருப்பர்' அதிபராகிறார்! பிறகு? என்கிறாயா, தம்பி! துவக்கம் இது! தொடர்வது என்ன என்கிறாயா? அடுத்தகிழமை கூறுகிறேன். இப்போது, காணக் கிடைக்காத காட்சியைக் காண்பதோடு திருப்தி அடைவோம்; வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர் அதிபராகி விட்டிருக்கிறார்.

அண்ணன்,

அண்ணாதுரை

# பாண்டியன் திருமேனி



## முன் கதை

பாண்டியன் குலசேகரன், தன் பதவியைக் காத்துக்கொள்ள, சைவத்தைத் தழுவிய தன் காரணமாக, குலசேகரனின் காலஞ்சென்ற தளபதியின் குமாரன் சோலையப்பனும் அவன் நண்பன் பொன்னையாவும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்.

பொன்னையா குலசேகரனையே கொன்றுவிடத் திட்டமிட்டு, அவன் மீது அரசரின் நகர்வலத்தின்போது வேலெறிய முயல்கிறான். குறிதப்பி, அரசர் பிழைக்கவே, பொன்னையா கைது செய்யப்பட்டு, அரண்மனை அதிகாரங்கள் அனைத்தையும் தன்பால் கொண்டுள்ள தூமகேதுவினால் மரணதண்டனை விதிக்கப்படுகிறான்,

சந்தர்ப்பவசத்தால் அறிமுகமான செந்தாமரை என்னும் நாட்டியக்காரியின் எச்சரிக்கையால் மறந்துவிட்டிருந்த பொன்னையாவின் தங்கை அஞ்சலையைப்பற்றி நினைத்துக் கொண்ட சோலையப்பன், அவளைக் காண அவள் வீட்டிற்கு இரவில் வருகிறான்.

அங்கே, அஞ்சலை தற்கொலை செய்துகொள்ளும் திட்டத்துடன் காணப்படவே, அதிர்ச்சியடைந்த சோலையப்பன். அவளைத் தேற்றுகிறான். அஞ்சலை, சோலையப்பனிடம், பொன்னையா கொடுத்துச் சென்ற ஒரு ஓலையைக் கொடுக்கிறாள்.

ஓலையைப் படித்து முடித்த சோலையப்பன், பொன்னையாவின் எல்லா முன்னேற்பாடுகளையும் அறிந்து, எப்படியும் தூமகேதுவை அழித்து, பாண்டியன் குலசேகரனின் ஆட்சியையும் மாற்றியமைப்பதாகச் சூள் எடுக்கிறான்,

அப்போது அஞ்சலையைக் கற்பழிக்கும் நோக்கத்தோடு அங்கு தூமகேது வரவே, சோலையப்பன் ஒளிந்துகொள்கிறான். அஞ்சலையின் பேச்சில், மயங்கிய தூமகேது அவளது காம்பற்ற முயலும்போது அஞ்சலை சட்டென்று கட்டாரியொன்றால் அவனைத் தாக்க முயல்கிறாள்.

ஆனால், தன் மிருக பலத்தால் தப்பிவிட்ட தூமகேது, எப்படியும் அவளைப் பழிவாங்குவதாகக் கூறிச் செல்கிறான். இதனைக் கேட்டுக்கொண்டிருந்த சோலையப்பன், அஞ்சலை உடனே மதுரைக்குப் புறப்படவேண்டும் எனவும், நாளை காலை தான்வந்து அதற்கு ஏற்பாடு செய்வதாகவும் கூறிப் புறப்படுகிறான்.

★ ★ ★

அவை விசாரணையின்போது பொன்னையா கூறிச்சென்ற உண்மைகளை எண்ணி உளம் புழுங்கிக்கொண்டிருந்த பாண்டிய மன்னன் குலசேகரனை அவனது ஆறு வயது மகன் விக்ரமன் பலப்பல கேட்டு சிந்தனையை மாற்றுகிறான், வினாக்களுக்கு விடையாக; வத்தவ நாட்டு உதயணன் கதையைப்பற்றிக் கூறுகையில், உதயணனின் அன்னையைப்பற்றி விக்ரமன் வினவி, தன் அன்னையைப்பற்றியும் கேட்கிறான்.

விக்ரமனின் வினாவால் திடுக்கிட்ட குலசேகரன் தன் அரசி காஞ்சனமாலையின் நினைவால் தடுமாறுகிறான். அவளது படுகொலையைப்பற்றிப் பதறுகிறான்.

விடையேதும் கூறாமல் சிந்தனையிலாழ்ந்த குலசேகரன் நெடுநேரத்துக்குப் பின்னர் விக்ரமனைப் பார்க்கவே, அவன் கண்களில் நீர் வழிந்துகொண்டிருப்பதைக் கண்டு துடிக்கிறான்—நடுங்குகிறான்—அலறுகிறான்............!

"சோகத்தினால் குழந்தையின் இதயம் குமுறுகிறதா? அன்னையின் நினைவு, அவனைக் கண்மூடி மௌனமாகும்படிச் செய்துவிட்டதா? விக்கிரமன் தூங்கவில்லை! பெற்றவளை எண்ணி, மனதிற்குள்ளேயே கதறியழுகிறான்! மகனே, நீ எதைக் கேட்டாலும் என்னால் தரமுடியும்! ஆனால் கொல்லப்பட்ட உன் அன்னையை என்னால் எப்படித் தரமுடியும்!...காஞ்சனமாலை! பார் கண்ணே! நீ பெற்ற உயிர்ச்சிலை — தங்கத் தொட்டிலிலே தாலாட்டிய உன் செல்வம்—இதோ அம்மா என்று இதயத்திற்குள்ளேயே கதறி. இரு விழிகளிலும் கண்ணீர் வடிக்கிறானே! ஆறுதல் சொல்ல முடியவில்லையே என்னால்!......காஞ்சனா — என் கண்ணின் மணியே— இன்பத்தின் களஞ்சியமே — வஞ்சகனின் வாளுக்குப் பலியான என் வாழ்வின் ஒளியே — உன்னைக் கேட்கிறானே விக்கிரமன்! அம்மா! அம்மா என்கிறானே! அந்தச் சின்னஞ்சிறு உதடுகளின் துக்கத்துடிப்பு, என் இதயத்தைப் பிளக்கிறதே, காஞ்சனா; ......மன்னருக்கெல்லாம் மன்னன் என்று மார்தட்டிக்கொள்ளும் அந்த இராசாதிராஜ சோழனின் இரு கண்களைக் கேட்டால்கூட, இவன் காலடியில் கொண்டுவந்து வைப்பேனே! காஞ்சனா. இவன் உன்னையல்லவோ கேட்கிறான்!" என்று கன்னங்களில் தாரைதாரையாகக் கண்ணீர் வழிந்தோட குலசேகரப் பாண்டியன் தேம்பினான்.

'காஞ்சனா' காஞ்சனா! கண்ணே காஞ்சனா' என்று மனதிற்குள்ளேயே கூவியழைத்தான்.

**கே.ஜி. இராதாமணாளன்**

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற பல சம்பவங்கள், திடீரென்று ஒன்றன்பின் ஒன்ருக அவன் மனக்கண் முன்பு வந்து நின்றன!

O

அப்பொழுது குலசேகரன், மன்னன் அல்ல, இளவரசன், அவன் தந்தை மாறவர்மன் சீவல்லபன், தென்பாண்டி நாட்டைச் செவ்வனே ஆட்சிபுரிந்து வந்தார்.

தளபதி ஆளவந்தாரின் இளைய சகோதரனும், சோலையப்பனின் சிற்றப்பனுமான நன்னன். இளவரசன் குலசேகரனின் உயிர்த்தோழன்.

அரசனின் அனுமதியின்பேரில், அந்த இணைபிரியாத இரு நண்பர்களும், பல நாடுகளையும் சுற்றிப் பார்த்துவரப் புறப்பட்டனர்.

கொங்குநாட்டில் அவர்கள் பிரயாணம் செய்தபோது. ஒரு நாள்...

"இவ்வளவு தூரம் வந்தோமே, வழியில் ஒரு குளம் குட்டைகூடக் கண்ணில் படவில்லையே! நன்னு, எனக்குத் தாகம் அதிகமாக இருக்கிறது!"

"இளவரசே! இந்த நாணல் புதருக்கு அப்பக்கத்தில் குளம் இருக்குமென்று நான் நினைக்கிறேன்!"

"எதைக்கொண்டு, அப்படி நீ நினைக்கிருய்!"

"அதோ தெரியும் அந்த மரங்களில் கொக்குகளும் நாரைகளும் தங்கியிருப்பதிலிருந்து யூகிக்கிறேன்!"

"அப்படியா? சரி. நீ குதிரைகளைக் கவனித்துக்கொள்! உன் யூகம் சரியா என்று பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு, குலசேகரன் நடந்தான்.

நாணற்புதரை நீக்கிக் கொண்டு கால் நோகச் சென்ற குலசேகரனின் கண்களுக்கு, குளத்தின் தண்ணீர் தெரிந்ததும். மகிழ்ச்சியால் அவன் முகம் மலர்ந்தது. அந்தத் திசை நோக்கி, வேகமாக நடந்தான்.

"யாரையா அது! நில்!" என்ற பெண்ணின் அதிகாரக்குரலைக் கேட்டதும், அவன் நின்று திரும்பிப் பார்த்தான்!

அங்கே......!

—பத்தாம் பகுதி—

## விளையாட்டின் விபரீதம்

"நில் என்று அதிகாரத்தோடு சொன்னவள் யார்? யாரையுமே காணுேமே? ஆனுல் குரல் கேட்டதே?"

இவ்வாறு எண்ணிய குலசேகரன், சுற்றும்முற்றும் பார்க்கையில், கலகலவென்ற சிரிப்பொலி கேட்டதும், திகைத்தான்! இதென்ன ஆச்சரியம்? ஆள்தெரியவில்லை — ஆனுல் பேச்சும் சிரிப்பும் கேட்கிறதே?

"ஏனய்யா திகைக்கிருய்? நில்லாதே! வந்த வழியே திரும்பிப் போய்விடு!" என்று திரும்பவும் அப்பெண் குரல் கட்டளையிட்டது!

"நீ யார்? எங்கிருந்து பேசுகிருய்?"

"ஆகாயத்திலிருந்து பேசுகிறேன்! இந்தக் குளத்தின் அருகே நீ போகக்கூடாது!"

"போவேன்—அதைக் கேட்க நீ யார்?" என்று சொல்லிக்கொண்டே, அவன் நடக்க ஆரம்பித்தான்.

"என்னய்யா நான் சொல்கிறேன் என் பேச்சைக் கேட்காமல் நீ செல்கிருய்?"

"நீ யார் என்றே தெரியாதபோது உன் பேச்சை நான் எதற்காகக் கேட்கவேண்டும்?"

"உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். போகாதே என்று!"

"அதைத்தான் என் எதிரில் வந்து சொல்லேன்!"

"நான் தேவதை. என்னைப்பார்த்தால் நீ கல்லாகி விடுவாய்!"

"இந்தாம்மா, இப்படிப்பட்ட கட்டுக் கதைகளை எல்லாம் நான் நம்புபவன் அல்ல! நான் கல்லானுல் ஆகிவிடுகிறேன், என் கண்ணெதிரில் வா நீ!"

"வரமுடியாது! என்னைக் கண்டு கல்லாகிவிட்டால், கற்சிலையான உன்னைப் பார்த்து, கடவுள் தன்னுல் முளைத்துவிட்டார் என்றெண்ணி மக்கள் கோயில் கட்டி, உன்னைத் தொழ ஆரம்பித்துவிடுவார்கள்! மானிடனுகிய உன்னையே மானிடர் தொழுவதைப் பார்த்து, என்னைப்போன்ற தேவதைகளால் சகிக்க முடியாது!"

"அப்படியானுல் ஒன்று செய்! நீ தேவதைதானே—உன்னிடம் சக்தியிருக்கிறது அல்லவா — என் கால்களை நடக்க முடியாதபடிச் செய்துவிடு பார்க்கலாம்!"

"தேவதையான என் சக்தியை நீ சந்தேகிக்கிருயா?"

சாதாரணதேவதையான உன்னை மட்டுமல்ல, சதிராடும் அரம்பை, ஊர்வசிகள் நிறைந்த தேவலோகத்தையே சந்தேகிப்பவன் நான்!"

> ### கண்ளேட்டம் விடுக!
>
> தமிழகத்தில் 4·10 உறுப்பினர்கள் உள்ள ஒரு விவசாயத் தொழிலாளியின் குடும்பம் முழுவதுக்குமாக ஒரு ஆண்டு வருமானம் ரூ. 375-26. அந்த குடும்பத்தின் ஒரு ஆண்டு செலவு ரூ. 487-60.
>
> ஆண்டுதோறும் தொடர்ந்து அந்தக் குடும்பத்துக்கு ஏற்படும் கடன் ரூ. 112-34.

என்று கூறிவிட்டு, அவன் கால்களை வேகமாக எடுத்துவைத்தான்.

"நில்! நில்! போகாதே! நில்!" என்று ஆத்திரம் கலந்த குரலில் கூறிக்கொண்டே, பக்கத்திலிருந்த ஈச்சஞ் செடியின் மறைவிலிருந்து, கையில் வேலோடு ஒரு பெண் அவன் எதிரில் வந்து நின்ருள்.

"வாம்மா தேவதையே!"

"கேலியிருக்கட்டும் திரும்பிப் போகிருயா இல்லையா?"

"யார் நீ, அதைச் சொல் முதலில்!"

"நான் கேட்கவேண்டிய கேள்வி அய்யா இது—நீ கேட்டுவிட்டாய்!"

"ஏன் என்னைத் தடுக்கிருய்?"

"குளத்திற்குப் போவதால்!"

"குளத்திற்குப் போனுல்..."

"உன் உயிர் போய்விடும்!"

"இதென்ன நச்சுத் தடாகமா?"

"நச்சுத் தடாகமில்லை — நல்ல தடாகம்தான்!"

"பிறகு?"

"இந்தக் குளத்தின் நீர் எந்த ஆணின் கண்களில் படுகிறதோ, அந்தக் கண்கள் மறுகணமே தரையில் விழுந்துவிடும்!"

"பார்வதியின் விருப்பப்படி, பரமசிவன் தந்த சாபமோ இது?"

"என்னய்யா கேலி பேசுகிருய், சிரிக்கிருய்?"

"நீ புராணம் பேசுவதால்!"

"நான் கொஞ்சம் இரக்கமுள்ளவள்—ஆகவே நீ பேச முடிகிறது!"

"இரக்கமுள்ளவள் மட்டுமா, பெரிய குறும்புக்காரியுமல்லவா நீ! இல்லாவிட்டால் ஈச்சஞ் செடிக்குச் செடி மாறி மாறிப் பதுங்கிப் பேசியதும், தேவதை என்றதும்..."

"நான் எங்கிருந்து பேசுகிறேன் என்பது தெரியாமல்தானே விழித்தாய்?"

"முதலில் சிறிது திகைத்தது உண்மைதான்! ஆனுல் உடனே தெரிந்துகொண்டேன் — எவளோ

### கண்ணேட்டம் விடுக!

தமிழக விவசாயத் தொழிலாளர்களில், கஞ்சியைத் தண்ணீரில் கலந்துப் பருகிப் பசியாறுவோர் 70 சதவீதம்!

அன்ருடம் காய்ச்சிச் சாப்பிடுவோர் 25 சதவீதம்!

காலை ஆகாரம் சாப்பிட வழி இன்றிப் பட்டினிகிடப்போர் 2 சதவீதம்!

மூன்று வேளையும் சாப்பிட முடிந்தவர்கள் 3 சதவீதம்!

ஒருத்தி — இடம்விட்டு இடம் மறைந்து நின்று, குறும்பு செய்கிருள் என்பதை!''

"நாஞக இருக்கவே இந்த வீண் பேச்சை எல்லாம் கேட்டுக் கொண்டு, சும்மா இருக்கிறேன்! என் கண்களில் படாமல், இதுவே நீ வேருெருத்தியின் கண்ணில் பட்டிருந்தால்......''

"பட்டிருந்தால்?''

"உன்பாடு அதோகதிதான்!''

"ஏன், இது ஆண்களே இல்லாத ஊரோ?''

"உளருதே! உன் தலைக்கு ஆபததை நீயே தேடிக்கொள்ளாதே! பேசாமல், போய்விடு!''

"விநோதமான பெண்ணுக இருக்கிருயே நீ—சிரித்துப் பேசுகிருய்—உடனே சீறி விழ ஆரம்பிக்கிருய்?''

"என்ன செய்வது, என் நிலை அப்படி! சரி, நீ போய்விடு!''

'எனக்குத்தாகமாக இருக்கிறது!'

"இதோ இப்படித் தெற்கே போ! அங்கே ஒரு குளமிருக்கிறது!''

'கண்ணுக்குத்தெரியும் குளத்தை விட்டுவிட்டு, தெரியாத குளத்தைத் தேடிச்செல்ல நான் என்ன பைத்தியக்காரனு?''

"இது இளவரசியார் குளிக்கும் தடாகம்! இதன் அருகே யாரும் வரக்கூடாது!''

"அரசரின் கட்டளையா இது?''

"ஆமாம் அய்யா, ஆமாம்! போய்விடு! வீணுக ஆபததில் சிக்கிக்கொள்ளாதே!'' என்று அந்தப் பெண் கூறியபோது, "யாரடி அவன்?'' என்று கேட்டுக் கொண்டே, வேலோடு வேருெருத்தி அங்கே வந்து சேர்ந்தாள்.

"யாரோ பாவம் — ஊருக்குப் புதிது போலிருக்கிறது! தாகமாக இருக்கிறது என்று......''

"தடியன் இந்தக் குளத்திற்கு வந்துவிட்டாஞ?'' என்று துடுக்குத்தனமாகச் சொன்ன புதியவளை, குலசேகரன் முறைத்துப் பார்த்தான்.

"என்னையா கோபமாகப் பார்க்கிருய்? மரியாதையாகச் சொன்னுல் போகவேண்டியதுதானே?''

"ஆமாம், இவள் சொன்னதைக் கேட்டுப் போகத்தான் திரும்பினேன்! ஆனுல் உன் பேச்சைக் கேட்ட பிறகு, போக விரும்பவில்லை —போகப் போவதுமில்லை!''

"ஆண் பிள்ளைக்குக் கோபம் வந்து, கோபத்திலிருந்து வைராக்கியம் பிறந்துவிட்டதா?''

"வேல் பிடித்திருக்கும் அதே உன் கையில் வளையலு மிருக்கிறது என்பது நினைவிருக்கட்டும்! இப்பொழுது என் கையில் வேல் இல்லை. ஆனுல் நெஞ்சில் வாள் உண்டு!...''

"வீராதி வீரன்தான், தெரிகிறது முகத்தைப் பார்த்தாலே!'' என்று சொன்ன அவள் கன்னத்தில், ஓங்கி அறைந்துவிட்டான்.

"அய்யோ!'' என்று அவள் அலறியதும், சுற்றிலுமிருந்த வேல் ஏந்திய மங்கையர் ஓடிவந்தனர்.

"திமிர் பிடித்த இவனைச் சும்மா விடக்கூடாது! இளவரசியிடம் இழுத்துச் செல்லவேண்டும்! பிடியுங்கள்! கட்டுங்கள்!'' என்று அடிபட்டவள் கோபத்தோடு கத்திஞள்.

"இளவரசியாரிடம் இழுத்துச் செல்லவேண்டும்!'' என்று அந்தப் பெண் கூறியது, குலசேகரனுக்கு மிகவும் தித்தித்தது! கொங்குநாட்டரசன் நந்திவர்மன் பெற்ற மகளான காஞ்சனமாலை பேரழகி என்று அவன் கேள்விப்பட்டிருந்தான்! அது மட்டுமல்ல, அந்த மலர் முகவதியையே தமது மகனின் மனைவியாகக் கொள்ள வேண்டுமென்று தந்தை சீவல்லபன் நினைத்திருப்பதையும், அவன் அறிவான்!

இளவரசி காஞ்சனமாலையைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைக்குமா

### கண்ணேட்டம் விடுக!

தமிழக அரசின் குறைந்தபட்ச சம்பள நிர்ணயச் சட்டம் (1948) விவசாயத் தொழிலாளர்களுக்கு நிர்ணயித்துள்ள ஊதிய விகிதம் குறைந்தபட்சம் 0-75 காசுகள்! அதிகபட்சம் 1-25 காசுகள்!!

என்ற எண்ணத்தோடுதான் அவன் கொங்கு நாடு வந்தது! அந்த எண்ணம் எப்படி ஈடேறினுல் என்ன?

ஆத்திரத்தோடு பெண்கள் நெருங்கினர் — அவன் பேசாமல் இருந்தான்! ஓணன் கொடியினுல் கைகளைக் கட்டினர் — அவன் புன்னகை செய்தான்!

"கால்களையும் கட்டுங்கள்!'' என்று அடிபட்டவள், கன்னத்தைத் தடவிப் பார்த்துக் கொண்டே கூறினுள்.

"வீண் சிரமம் உங்களுக்கு எதற்கு? நான் வருகிறேன், நீங்கள் எங்கு அழைத்தாலும்!'' என்று அவன் சொன்னதும் நீண்ட ஓணன் கொடிகளை அவனது இடுப்பைச் சுற்றிக் கட்டி—அந்தக் கொடிகளை நான்கைந்து பெண்கள், கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

அந்த முத்துநீர் தடாகத்தில் மூழ்கிக் குளித்துவிட்டு, ஈரச் சேலையை மாற்றிக்கொண்டு, பல்லக்கில் ஏறச்சென்ற இளவரசி காஞ்சனமாலை, எதிரில் கட்டியிழுத்துவந்த குலசேகரனைக் கண்டதும், "என்ன செய்தி?'' என்று பக்கத்திலிருந்த சிலம்புத்தாய் என்ற தனது தோழியைப் பார்த்துக் கேட்டாள்.

"அம்மா, நீங்கள் குளித்துக் கொண்டிருந்தபோது, இவன் குளத்திற்குள் இறங்கப் பார்த்தான்! தடுத்தோம்—கேட்கவில்லை; அரசரின் உத்தரவையும எடுத்துச் சொன்ஞேம் — மதிக்கவில்லை! பதட்டத்தோடு பேசி, பளீரென்று என் கன்னத்தில் அடித்துவிட்டான்!'' என்று அடிபட்டவள் மூச்சு வாங்கக் கூறினுள்.

குலசேகரனின் முகத்தை இளவரசி ஏறிட்டுப் பார்த்தாள். அவனும் தன்னைப் பயமின்றிப் பார்ப்பதையும், புன்னகை புரிவதையும் கண்டு, அந்தக் கன்னியின் கண்கள் மிரண்டன!

[ வளரும் ]

### முகப்பில்:

இந்த இதழ் 'பாண்டியன் திருமேனி' தொடர் கதையில் வரும் ஒரு சம்பவம்.




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனுல்